Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 28 புதன்கிழமை (15-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:321

# சிஹல உறுமயவின் குரங்குபாஞ்சான் பயணம் பாதி வழியிலேயே பிசுபிசுப்பு!



புலிகளின் முகாம் நோக்கிச் சென்ற சிஹல உறுமயவினரும் ஸ்ரீலங்கா பொலிஸாரும் வாக்குவாதப்படும் காட்சி.

## பாதுகாப்புப் படையினர் வழிமறித்து அனைவரையும் திருப்பி அனுப்பினர்

கொழும்பு,ஒக்ரோபர்15

**விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை அகற்றக்கோரி உண்ணா விரதப் போராட்டத்தை அங்கு மேற்கொள்ள நேற்று பயணமான 'சிஹல உறுமய' கட்சியினர் அம்முகாமைச் சென்றடைவதற்கு முன்னரே சூரன்கல் இராணுவ முகாமுக்கு முன்னாலுள்ள கோயில்குளம் என்னும் இடத்தில் வழி மறித்து திருப்பியனுப்பப்பட்டனர்.**

சூரன்கல்லில் இருக்கும் இராணுவ முகாமை அவர்கள் கடந்து செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அவர்களை வழிமறிக்க சூரன்கல்லுக்கு முன்னால் பொலிஸ் வீதித்தடை சாவடி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்றும் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல நேற்று பிற்பகல் தெரிவித்தார்.

குரங்குபாஞ்சான் முகாமிலிருந்து எட்டு மைல்கல் தூரத்தில் தம்பலகாமம் நோக்கி சூரன்கல் அமைந்திருக்கிறது. சூரன்கல் முகாமிலிருந்து சுமார் இரண்டு மைல்கள் முன்நோக்கி பொலிஸ் வீதித்தடை சாவடி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சாவடியில் வீதியை மறித்து இரும்பு வேலிகள் போடப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

சிஹல உறுமயவின் அழைப்பை ஏற்று தென்பகுதியில் இருந்து அக்கட்சியின் ஆதரவாளர்கள் நேற்றுக் காலை கந்தளாய் நகரைச் சென்றடைந்தனர். கார், பஸ், வான் என 15 வாகனங்களில் இவர்கள் சென்றிருந்தனர்.

சிஹல உறுமயவின் கந்தளாய் அமைப்பாளர் தும்புள்ளேகமயின் தலைமையில் இரண்டு வான்களில் கந்தளாய் பிரதேச ஆதரவாளர்களும் அவர்களுடன் இணைந்து கொண்டனர்.

கந்தளாயிலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் பெருமளவு பௌத்த பிக்குகளும் காணப்பட்டனர். ஒலி பெருக்கி மூலம் ஊர்மக்களையும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## போராளியின் இறுதி நிகழ்வில் இராணுவத்தினர் கடும் கெடுபிடி

### வவுனியா அரசியற்றுறை குற்றச்சாட்டு

வவுனியா,ஒக்.15

போராளி ஒருவரின் இறுதி நிகழ்வை நடத்துவதில் இராணுவத்தினரின் கடும்கெடுபிடிகளை எதிர்நோக்க நேரிட்டதாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்ததாவது:-

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வீதியில் இடம்பெற்ற விபத்தில் 2ஆம் லெப்டினன்ட் ஆழிவேந்தன் (கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்) என்பவர் உயிரிழந்தார். அவரது உடலை சொந்த ஊரான வவுனியாவுக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## டென்மார்க் அரசின் பிரதிநிதிகளுடன் புலிகள் சந்திப்பு

கொழும்பு,ஒக்.15

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் டென்மார்க் வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று டென்மார்க்கில் இடம்பெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் 'பிரபா'வின் ஓர் உத்தரவுக்குப் பாராட்டு!

கொழும்பு,ஒக்.15

இந்தியாவின் 34ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் ஓர் உத்தரவு பாராட்டைப் பெற்றது. இலங்கை திரைப்படத் தயாரிப்பாளரான பிரசன்ன வித்தானகேயே இப்பாராட்டைத் தெரிவித்தார்.

இத்திரைப்பட விழாவில் பங்குபற்றி செய்தியாளர்களிடம் பேசிய வித்தானகே, தென் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் ஆபாசத் திரைப்படங்களால் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து இலங்கை அரசு எதனையும் செய்யவில்லை. ஆயினும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆபாச திரைப்படங்கள் மீது தடைவிதித்திருக்கிறார் என்று கூறினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபரின் கடமைகள் உள்துறை அமைச்சின் செயலாளரிடம்!

### புதிய அதிபர் பதவிக்கு இருபெயர்கள் சிபாரிசு

கொழும்பு,ஒக்.15

புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படும் வரை அவரது கடமைகளை உள்துறை அமைச்சின் செயலாளர் ஏ.எம்.ஜுனைட் பொறுப்பேற்பார் என்று உள்துறை அமைச்சின் ஊடகப் பேச்சாளர் அந்தனி பெர்னாண்டோ தெரிவித்தார்.

புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட இருவர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர். பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான சந்திரா பெர்னாண்டோ, இந்திரா டி சில்வா ஆகியோரின் பெயர்களே சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன.

அரசியல் அரசமைப்புச் சபையின் சிபாரிசின் அடிப்படையிலேயே ஜனாதிபதி புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்க வேண்டும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ளார். அவர் நாடு திரும்பியதும் புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் குறித்து ஆராயப்படும். (ஐ)

## தலதாமாளிகை குண்டுவெடிப்பு: இன்று தீர்ப்பு

கொழும்பு,ஒக்.15

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக் குண்டுவெடிப்புத் தொடர்பான வழக்கில் இன்று கண்டி உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவுள்ளது.

1998 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை கடந்த ஐந்து ஆண்டுகளாக இடம்பெற்று வந்த நிலையில் இன்று அதற்கான தீர்ப்பு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-12)

## மன்னார் பொங்குதமிழ் நிகழ்ச்சியில் அமைச்சர் சந்திரசேகரன் பிரதம அதிதி

கொழும்பு,ஒக்.15

சமூக அபிவிருத்தி அமைச்சரும், நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ பிரதி அமைச்சரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ.சந்திரசேகரன் இன்று மன்னாரில் நடைபெறும் 'பொங்குதமிழ்' நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்புரை நிகழ்த்துவார்.

'பொங்குதமிழ்' ஏற்பாட்டுக் குழுவினரின் அழைப்பை ஏற்று மன்னார் செல்லும் அமைச்சர் சந்திரசேகரன் அங்கு பல நிகழ்வுகளில் கலந்துகொள்ள இருக்கிறார் என்று அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## உதயனை மிரட்டிப் பார்க்கிறார் அமைச்சர் தி.மகேஸ்வரன்

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விருது வழங்கும் வைபவத்தில் அநாகரிகமான முறையில் - அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டுகளை - 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் பெயர் குறிப்பிடாமல் அவற்றின் மீது சுமத்தி, அமைச்சர் தி.மகேஸ்வரன் உரையாற்றியிருந்தமை குறித்து நேற்றுமுன்தினம் உதயனில் செய்தி வெளியாகியிருந்தது அல்லவா? அது தொடர்பாகத் தனது வழமையான - வாய்ச்சவடால் மிரட்டல் பாணியில் - நீண்ட அறிக்கை ஒன்றைத் தமது அமைச்சின் சார்பில் தமது அமைச்சு ஊடாக அனுப்பி வைத்திருக்கின்றார் மகேஸ்வரன். வழ வழா, கொழ கொழா என்ற அந்த நீண்ட அறிக்கையின் சாராம்சம் இதுதான்:-

★ சம்பந்தப்பட்ட கூட்டத்தில் எந்தப் பத்திரிகை நிறுவனத்தையோ, நிறுவன நிர்வாகியையோ அமைச்சர் பெயர் குறிப்பிட்டு விமர்சிக்கவில்லை. உதயன் 'தொப்பி தனது தலைக்கே பொருந்தும்' என்ற ரீதியில் செய்தி வெளியிட்டு தனது சுயரூபத்தைக் காட்டியுள்ளது.

★ 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளில் பணிபுரிபவர்களை ஊடகவியலாளர் ஒன்றியத்தில் இணையவிடாது வலியுறுத்துவதாக அப்பத்திரிகைகளில் பணிபுரிபவர்களே அமைச்சருக்குத் தெரிவித்துள்ளனர். அவர்களின நலன்கருதி, அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு அமைவாக, அவற்றின் இரகசியத் தன்மையை அமைச்சர் பேணியுள்ளார்.

★ "உதயனில் பணிபுரியும் பத்திரிகையாளர்கள் தங்களின் சுயாதீன நிலை கருதி எந்த ஊடகவியலாளர் சங்கத்திலும் அங்கத்துவம் பெறாமல் இருக்கின்றார்கள்" என்று 'உதயன்' தெரிவித்திருப்பது நீதி தவறாது, நடுநிலையாக, பக்கச்சார்பின்றி எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் செய்தி வெளியிடும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பத்திரிகையாளர்கள் எவரும் சுயாதீன நிலையில் செயற்படவில்லை எனக் குற்றம்சாட்டி அவர்களை அவமதிப்பதாக அமைகிறது. இது கண்டிக்கத்தக்கது. ஏனைய ஊடகங்களைக் கொச்சைப்படுத்துவதாகவும் அமைகிறது.

★ நல்லூர் திருவிழாக் காலத்தில் ஆலயச் சுற்றாடலில் பக்தர்களுக்கு இடையூறாக அமைச்சர் வாகன பவனி வந்தார் என்பதை நிரூபிக்க முடியுமா? அமைச்சர் அப்படி வாகன பவனி வரவில்லை என்பதை இலங்கை வாழ் இந்துக்களின் ஒரே ஒரு ஆதீன குருமகா சந்நிதானமும், யாழ் அரச அதிபரும் அனைத்து இந்துக்களும் நன்கு அறிவர். திரிபுபடுத்தப்பட்ட இச்செய்தி குறித்து அவர்கள் விசனம் அடைந்துள்ளனர். தனது செய்தியில் குறிப்பிட்ட தகவலை உதயனால் நிரூபிக்க முடியுமா?



★ யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட சைவ சிறுவர் இல்லச் செயலாளரை இந்தியாவில் குற்றஞ்சாட்டப்

(2ஆம் பக்கம் பார்க்க)

## இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# உதயனை மிரட்டிப் பார்க்கிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு சிறையில் உள்ள சுவாமிகளுடன் ஒப்பிட்டு செய்தி வெளியிடவில்லை என்று 'உதயன்' மறுப்பது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முற்படும் செயலாகும். இந்தியாவில் குற்றஞ்சாட்டப்பட்ட சுவாமிகளிடம் 'உதயன்' நிர்வாகி ஆசிபெறும் படம் அமைச்சரிடம் உள்ளது. பத்திரிகை நிர்வாகமும் நிறுவனமும் விட்ட தவறுக்கு நிர்வாகியின் குடும்பத்தினரை இழுப்பது மனித நாகரிகமற்ற செயல் என்பதாலும் அதனை ஏனைய ஊடகங்களில் பிரசுரிப்பது அநாகரிகமானது என்பதாலும் அமைச்சர் இது விடயத்தில் தனது பெருந்தன்மையை வெளிக்காட்டி அமைதியாய் இருந்தார். தன்னிடம் உள்ள படத்தினை அமைச்சர் சமயப் பெரியார் அல்லது பொதுவான ஒருவரிடம் கையளிக்கத் தயாராக உள்ளார். அவரிடம் அப்படத்தைப் பார்வையிட்டு சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம்.

★ ஊடகவியலாளர் விருது வழங்கும் வைபவத்தில் உதயனுடன் இணைந்து செயற்பட்டதற்காக பத்திரிகையாளர் எவரும் கௌரவிக்கப்படவில்லை 'உதயன்' உரிமை கொண்டாடும் செய்தியாளர் திரு. தில்லைநாதன் கடந்த 38 வருடகாலமாக வேறு செய்திப் பத்திரிகை நிறுவனத்தில் கடமை புரிபவர் என்ற முறையிலேயே அவருக்கு விருது வழங்கப்பட்டதேயன்றி 'உதயன்' - பத்திரிகையாளர் என்ற வகையில் அல்ல. அப்பத்திரிகையாளர் மீது உதயன் நிறுவனம் எவ்விதத்திலும் உரிமை கொண்டாட முடியாது என்பதை ஆணித்தரமாகக் குறிப்பிட விரும்புகிறோம்.

★ இலங்கையில் தமிழ் ஊடகத்துறைக்கு அரும்பாடுபட்டு உழைத்துவரும் ஊடகவியலாளர் பங்குகொண்டுள்ள அமைப்புதான் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம். அதன் செயற்பாடுகள் இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமானவை. ஒன்றியத்தை விமர்சிக்கும் யோக்கியம் 'உதயன்', 'சுடர்ஒளி'க்குக் கிடையாது. 'உதயன்', 'சுடர்ஒளி' ஊடகவியலாளர்கள் மேற்படி சங்கத்தில் அங்கத்துவம் பெறவில்லை என்பதை உறுதிப்படுத்திய நிலையில்தான் அமைச்சர் மேற்படி நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

★ யாழ்ப்பாணத்தில் வெளிவந்த /வெளிவருகின்ற இரு பத்திரிகை நிறுவனங்களுக்கு தங்களால் ஏற்பட்ட நெருக்கடிகளை நாங்கள் அறிவோம். தனிப்பட்ட பகைமையை தனிப்பட்ட ரீதியில் எதிர்கொள்ள அமைச்சர் தயாராக உள்ளார். உங்கள் பாணியில் பதிலடியை எதிர்பார்த்தால் அதே பாணியில் பதில்தர தயாராக உள்ளார். அமைச்சரின் கௌரவ வர்த்தக நடவடிக்கைக்கு குறுக்கீடு செய்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அதே பாணியில் அமைச்சர் இன்று அரசியல் ரீதியில் பதிலடி கொடுப்பதைத் தங்களுக்கு ஞாபகப்படுத்துவதுடன் தாங்கள் தொடர்ந்தும் எம்மீது அபாண்டமான பழி சுமத்தினால் உங்கள் பாணியில் பதிலளிக்க அமைச்சர் தயாராக இருக்கிறார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உதயனின் விளக்கம்

அமைச்சரின் பதில் அளவுக்கு அதிகமாக நீண்டதாக இருந்ததால் அதன் முக்கிய அம்சங்கள் - சாரங்கள் - முழுதாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு விளக்கம் இங்கே தரப்படுகின்றது அவற்றை வாசிக்கும் நமது வாசகர்கள், தமிழில் வெளியான 'உதயன்' செய்திகள் குறித்து அமைச்சரின் புரிந்துகொள்ளும் அறிவை எடைபோட முடியும் எனக் கருதுகிறோம்.

1. சம்பந்தப்பட்ட நிகழ்வில் 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் பெயர் குறிப்பிடாமல் அவற்றின் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை அமைச்சர் சுமத்தினார் என்பதை தெட்டத்தெளிவாக தனது மூலச் செய்தியின் ஆரம்பத்திலேயே 'உதயன்' குறிப்பிட்டிருந்தான் நல்லூர் திருவிழாக் காலத்தில் அமைச்சரின் கார் பவனி பற்றிய செய்தி இலங்கை தமிழ் ஊடகங்களின் 'உதயன்', 'சுடர்ஒளி'யில் மட்டுமே வெளியாகியிருந்தன. அதைக்குறிப்பிட்டு அமைச்சர் பிரஸ்தாபித்த பின்னர் 'தொப்பி எமக்கல்ல; யாருக்கோ' என்று 'உதயன்' பொறுத்திருக்க முடியாது.

2. எந்த ஊடகவியலாளர் சங்கத்திலும் 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகையாளர்களைச் சேரக்கூடாது என்றோ அல்லது சேரும்படியோ உதயனோ அதன் நிர்வாகமோ எந்தக் கட்டத்திலும் வற்புறுத்தவோ, வலியுறுத்தவோ, நிர்பந்திக்கவோ இல்லை என்பதை உதயன்தனது பேனாவின் மீது ஆணையாக - மீண்டும் உறுதிபடக் கூறுகிறான். 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளில் பணிபுரிபவர்களே அதைத் தன்னிடம் தெரிவித்தார்கள் என்றும், அவர்களின் நலன்கருதியும் அவர்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு அமைவாகவும் அவர்கள் பற்றிய இரகசியத் தன்மையைத் தான் பேணுகின்றார் எனவும் அமைச்சர் கூறுவது ஏற்கனவே தான் குறிப்பிட்டது பொய் என்பதால் அதை நிரூபிக்க முடியாத நிலையில், அதிலிருந்து தப்புவதற்கேயாகும். பொய்யில் வளர்ந்த அரசியல்வாதிகள் இவ்வாறு கூறிச் சமாளிப்பது பொதுவானதுதான்.

3. "உதயனில் பணிபுரியும் பத்திரிகையாளர்கள் தங்களின் சுயாதீன நிலை கருதி எந்த ஊடகவியலாளர் சங்கத்திலும் அங்கத்துவம் பெறாமல் இருக்கின்றார்கள்" என்று 'உதயன்' செய்தியில் குறிப்பிட்டிருப்பது 'உதயன்', 'சுடர்ஒளி' ஆசிரிய பீட ஊடகவியலாளரின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர, உதயனின் நிலைப்பாடு அல்ல. அப்படி அவர்கள் கருதுவதை வெளிப்படுத்துவதன் மூலம் 'உதயன்', 'சுடர் ஒளி' சுயாதீனமானவை, ஏனையவை சுயாதீனமற்றுச் செயற்படுபவை என்று 'உதயன்' கூற முன்வரவில்லை. அப்படி அமைச்சர் கருதுவது அவரது விளக்கமின்மையே தவிர வேறில்லை. அத்தோடு, தங்கள் சுயாதீன நிலை கருதி எந்த ஊடகவியலாளர் சங்கத்திலும் அங்கத்துவம் பெறாமல் இருப்பதை ஒருசாரார் விரும்புகின்றனர் என்றால், ஏனையோர் எல்லாம் ஒரு பக்கம் சார்ந்தவர்கள் என்று அவர்கள் கருதுகின்றனர் என அர்த்தம் கொடுப்பது அமைச்சரின் விஷமத்தனம்தான். சங்கங்களில் இணையாமலேயே தங்களுக்குள் நல்லுறவைப் பேணும் பத்திரிகையாளர்களுக்கு இடையில் சிண்டு முடித்துவிடும் இம்முயற்சி அரசியல் கோமாளித்தனத்தின் ஓர் அங்கமே. அது பலிக்கும் என அமைச்சர் நினைப்பது அவரது பகல்கனவுதான்.

### வாகன பவனி

4. அமைச்சரின் நல்லூர் வாகனப் பவனி குறித்து உதயனில் வெளியான செய்தி சரியானது என 'உதயன்' உறுதிபடக்கூறுகிறான். அமைச்சரின் அன்றைய வாகனப் பவனியை 'உதயன்' படம்பிடித்து வைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், அங்கிருந்த பக்தர் கூட்டம் கண்ணை மூடிக்கொண்டிருக்கவில்லை என்பதையும் அவர்கள் அனைவரையும் அமைச்சர் இலகுவில் முட்டாள்களாக்கி விடமுடியாது என்பதையும் அவர் உணரவேண்டும். இவ்வளவு உணர்வுபூர்வமான (Sensitive) விடயத்துக்கு உத்தியோகபூர்வ மறுப்பு அனுப்புவதற்கு சுமார் இரண்டுமாத காலம் அமைச்சர் காத்திருந்ததே அமைச்சரின் இந்த விளக்கம் குறித்து வாசகர்கள் ஒரு முடிவை மேற்கொள்ள வழி செய்யும் என நினைக்கிறோம். தனது திருவிளையாடல்களுக்கு விளக்கம் கூற குருமகா சந்நிதானத்தையும் அரச அதிபரையும் அமைச்சர் அழைக்கத் தேவையில்லை.

5. யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட சைவ நிறுவன அலுவலர் ஒருவரை, ஏற்கனவே இந்தியாவில் குற்றம் சாட்டப்பட்டு சிறையிலே உள்ள சுவாமிகள் ஒருவருடன் ஒப்பிட்டு 'உதயன்', 'சுடர்ஒளி' எழுதியதாக மீண்டும் அமைச்சர் குறிப்பிடுவது தமிழில் செய்திகள், தகவல்கள் குறித்து விளங்கிக் கொள்ளும் அடிப்படை அறிவு தன்னும் சிலருக்கு இல்லையே என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது. அப்படி ஒப்பிடும் வகையில் செய்தி வெளியானதாகவும், அதை மறுப்பது முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முற்படும் செயலாகும் என்றும் அமைச்சர் கூறுகின்றார். அந்த முழுப் பூசணிக்காயை அமைச்சர் அம்பலப்படுத்துவாரா? 'உதயன்', 'சுடர்ஒளி' அலுவலகத்துக்கு அமைச்சரின் உதவியாளர்கள் யாரேனும் சமுகம் தந்தால், இக்காலத்தில் ஏற்கனவே பிரசுரமான 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகள் அனைத்தினதும் பிரதிகளுக்கு மத்தியில் இந்தப் 'பூசணிக்காயை' அவர் தேடி எடுப்பதற்கு வசதி செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறான் 'உதயன்'. ஆனால், அத்தகைய செய்தி எதிலும் அமைச்சர் குறிப்பிடும் குற்றச்சாட்டை நிரூபிக்கும் அம்சங்கள் ஏதும் இல்லை. "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் விதத்தில்" கட்டுரைகளைத் தவறாகப் புரிந்துகொண்ட அமைச்சரின் அறிவே அவரை இப்படி கூற வைக்கின்றது என 'உதயன்' கருதுகிறான்.

### கரிசனைக்கு நன்றி

6. 'உதயன்' நிர்வாகியின் குடும்பத்தினர் மீது அமைச்சர் காட்டும் கரிசனைக்கு நன்றி. அதேவேளை 'நாகரிகம்' குறித்தும் பெருந்தன்மை குறித்தும் பேசும் நிலையிலாவது அமைச்சர் இருக்கிறார் என்பது வியப்பளிக்கும் நல்லதொரு மாற்றம். அமைச்சரின் தனிப்பட்ட வர்த்தக நடவடிக்கைக்கு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறுக்கீடு செய்தது குறித்து குறிப்பிட்டு இந்த விடயத்தில் தனது வர்த்தக விவகாரங்களையும் தானே இழுத்துவிட்டிருக்கிறார் அமைச்சர். எனவே, அவரது தனிப்பட்ட வர்த்தக விடயங்களை பொது விவகாரத்தோடு நாம் தொடர்புபடுத்தும் நிலையை 'உதயன்' தானாக ஆரம்பிக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டு மேலே செல்கிறோம்.

அமைச்சரை "மண்ணெண்ணை மகேஸ்வரன்" என்று ஏனையோர் இளக்காரமாக விமர்சித்தபோது 'உதயன்' அப்படிக்கருதவில்லை. யாழ் மக்களுக்கு அந்த நேரத்தில் - தாம் அரசியல்வாதியாக முன்னர் - அவர் கொண்டு வந்து கொடுத்த மண்ணெண்ணையின் பெறுமதி (Value) என்னவென்பதை அந்த நேரத்தில் குடாநாட்டில் வாழ்ந்த மக்களும் உதயனும் நன்கு உணர்வர். அதேசமயம் அந்த மண்ணெண்ணையைக் கொண்டு வந்து சேர்ப்பதற்காக அவர் எத்தனை "சுத்துமாத்து" செய்ய வேண்டியிருந்தது என்பதும் விதந்துரைக்கப்படத்தக்கது. "கொக்கோ கோலா" போத்தலில் அதே நிறத்திலான "என்ஜின் ஒயில்" அடைத்து எடுத்து வந்து, அது இடையில் சிக்கிய கதை, உதயனுக்கும் யாழ். மக்களுக்கும் நன்கு தெரியும். இதை ஏன் 'உதயன்' இங்கு குறிப்பிடுகிறான் என்ற கேள்வி வாசகர்களுக்கு எழலாம். அமைச்சரின் கெட்டித்தனங்களை இங்கு குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது.

### பகிரங்க சவால்

இந்தியாவில் குற்றம்சாட்டப்பட்ட பிரேமானந்தா சுவாமியிடம் 'உதயன்' நிர்வாகி ஆசி பெறும் படம் தன்னிடம் இருப்பதாக கதை விடுகிறார் அமைச்சர். அந்தப்படமும் 'கொக்கோகோலா' போத்தலில் அடைக்கப்பட்ட 'என்ஜின் ஒயில்' போல் கம்பியூட்டர் மூலம் செய்யப்படும் சுத்துமாத்தாக இருக்கக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டவேண்டிய தேவை இருக்கின்றது.

தன்னிடம் இருப்பதாக அமைச்சர் 'கதைவிடும்' படத்தை (கம்பியூட்டர் மூலமான சுத்துமாத்தாக இல்லாமல்) ஒரிஜினல் பிலிம் ரோலோடு பகிரங்கப்படுத்தி வெளிப்படுத்த அவர் தயாரா என மீண்டும் சவால் விடுகிறோம். சமயப் பெரியார்கள் மற்றும் இப்படங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தும் தொழில்நுட்ப வல்லுநர்கள் முன்னிலையில் அதனை அம்பலப்படுத்துவதற்கான தினத்தை பகிரங்கமாக அறிவிக்கும்படி அவரை நேரடியாகக் கேட்கிறோம். அப்படியான உண்மைப் படத்தை சமர்ப்பிக்க முடியாமல் போனால் தனது அமைச்சர் பதவியைத் துறக்கவும் அவர் தயாரா என்று பகிரங்க சவால் விடுகிறோம்.

### விருது விவகாரம்

7. விருது வழங்கும் வைபவத்தில பாராட்டப்பட்ட செய்தியாளர் திரு. தில்லைநாதன் உதயனுடன் இணைந்து செயல்பட்டதற்காக அவருக்கு கௌரவம் வழங்கப்பட்டது என்று உரிமை கொண்டாட (அது சரியாக இருந்திருப்பினும் கூட) 'உதயன்' எந்தக் கட்டத்திலும் முயலவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். உதயனின் செய்தியைச் சரிவர வாசித்து அறிந்து கொள்ளும் அறிவின்மைதான இங்கும் அமைச்சரை இப்படிக் குறிப்பிட வைத்திருக்கின்றது.

உதயனின் செய்தியில் "விருது வழங்கும் விழாவில் பிரதேச ரீதியாகப் பாராட்டப்பட்டவர்களில் ஒருவர் உதயனின் செய்தியாளர். அவர் ஊடகவியலாளர் சங்கங்களில் இணைந்து செயற்படுபவர். அவருக்கு விருது கிடைத்ததை ஒட்டி 'உதயன்' நிர்வாகம் அவருக்கு விசேட பாராட்டுக்களை அனுப்பி வைத்தது." - என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் 'உதயன்' ஆரம்ப காலம் முதல் அதன செய்தியாளராகப் பணிபுரிந்து வருகின்றார். அவருக்கு விருது வழங்கப்பட்டதை ஒட்டி, இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் அவர் 'உதயன்' செய்தியாளர் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அது விருது வழங்கும் விழாவின்போதும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிவிக்கப்பட்டது. சில சமயம் அதனைப் புரிந்துகொள்ளும் அறிவு அமைச்சருக்கு இல்லாமல் இருந்திருக்கலாம்) உதயனில் பணியாற்றியதற்காகவோ அல்லது வேறு ஊடகத்தில் பணியாற்றியதற்காகவோ அவருக்கு விருது வழங்கப்பட்டது என்பது உதயனின் விவகாரம் அல்ல. அது ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விவகாரம்.

ஆனால், 'உதயன்' தனது செய்தி ஊடாகக் குறிப்பிட்டது - சம்பந்தப்பட்ட செய்தியாளர் பல ஊடகவியலாளர் சங்கங்களில் இணைந்து செயற்படுபவர் என்பதைத்தான் உதயனில் பணியாற்றும் செய்தியாளர் ஒருவர் பல ஊடகவியலாளர் சங்கங்களில் இணைந்து செயற்படுகின்றார் என்பதையும் அவருக்கு விருது கிடைத்ததை ஒட்டி 'உதயன்' நிர்வாகம் பரிசு வழங்கி, பாராட்டு அளித்து கௌரவித்தது என்பதையும்தான் அதன் மூலம் தனது செய்தியாளர் எவரேனும் ஊடக ஒன்றியங்களில் பணியாற்றுவதை 'உதயன்' நிர்வாகம் தடுக்கவில்லை என்பதைத்தான் அவ்வாறு ஒன்றியத்தில் இணைந்து செயலாற்றும் ஒருவருக்கு விருது கிடைத்ததை 'உதயன்' நிர்வாகம் பாராட்டுகின்றது என்பதைத்தான் அமைச்சர் மகேஸ்வரன் கனவு காண்பதைப்போல ஊடகவியலாளர் ஒன்றியத்தில் தனது செய்தியாளர்கள் இணைவதை 'உதயன்' நிர்வாகம் கட்டுப்படுத்த முனைந்திருக்குமானால், அதற்கு மாறாகச் செயற்படும் தனது செய்தியாளரை 'உதயன்' பாராட்டியிருக்காது என்பதைத்தான்.

ஆனால் இதனைப் புரிந்து கொள்ள முடியாத அமைச்சர், திரு. தில்லைநாதனின் விருதுக்கு 'உதயன்' உரிமை கோருவதாக - தன்னைப்போல - உதயனையும் நினைத்து கருத்து வெளியிடுகின்றார்.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தை 'உதயன்' விமர்சிப்பதாகவும் அதற்கு உதயனுக்கு யோக்கியதை இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருப்பதும் தவறு.

'உதயன்' கேட்டது ஒன்றுதான்:- ஒரு பத்திரிகை நிறுவனம் மீதும் அதன் நிர்வாகிகள் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி, மிகவும் கீழ்த்தரமான முறையில் விமர்சித்துப் பேசுவதற்கு அமைச்சர் மகேஸ்வரன் போன்றவர்களுக்குத் தங்கள் மேடையில் இடங்கொடுத்து அத்தகையோரை வளர்க்கும் ஊடகவியலாளர் சங்கங்களில் அந்த நிறுவனத்தின் பத்திரிகையாளர் எவரும் இணைந்து செயற்பட முன்வருவார்களா? - என்ற கேள்விதான் அது.

அது ஒன்றியத்தை விமர்சிக்கும் செயல் அல்ல. ஒன்றிய மேடையைத் தவறான முறையில் அமைச்சர் மகேஸவரன் போன்றோர் பயன்படுத்தியதை ஒன்றியம் அனுமதிக்கின்றதா, ஏற்றுக் கொள்கின்றதா என்ற உதயனின் ஆதங்கம் நிறைந்த கேள்வியின் வெளிப்பாடே அது.

'உதயன்' ஆசிரியரையும் கௌரவ அதிதியாக அழைத்து வைத்துக் கொண்டு, அந்தப் பத்திரிகை மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு அந்த மேடையை அமைச்சர் பயன்படுத்தியதை ஒன்றியம் அனுமதிக்கின்றதா? இது தொடர்பாக ஒன்றியத்தின் நிலைப்பாடு என்ன? 'உதயன்', 'சுடர்ஒளி' ஊடகவியலாளர்களை ஒன்றியத்தில் இணையவிடாமல் அதன் நிர்வாகத்தினர் தடுக்கின்றனர் என்று பொய்க்குற்றச்சாட்டைச் சுமத்தி நீலிக் கண்ணீர்விடுத்த அமைச்சர், தமது பதில் அறிக்கையில் 'உதயன்', 'சுடர்ஒளி' ஊடகவியலாளர்கள் மேற்படி சங்கத்தில் அங்கத்துவம் பெறவில்லை என்பதை உறுதிப்படுத்திய நிலையில்தான் அமைச்சர் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்" என்று கூறியிருப்பது முன்னுக்குப் பின் முரணாக இருக்கின்றதே! 'உதயன்', 'சுடர்ஒளி' ஊடகவியலாளர்கள் இந்த ஒன்றியத்தில் அங்கத்துவம் பெற்றிருக்கிறார்கள் என அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தால் அமைச்சர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருக்க மாட்டாரோ? இவ்வாறு உறுதிப்படுத்தித்தான் அமைச்சர் விழாவில் கலந்து கொள்ள இணங்கினாரா? அவர் அந்த மேடையை பயன்படுத்திய முறை நாகரிகமானதா? இந்த விழா தொடர்பாக 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் செயற்பாடு எத்தகையது? - என்பது பற்றியெல்லாம் தங்கள் நிலைப்பாட்டை தெளிவாக - விளக்கமாக - வெளிப்படுத்துவதன் மூலம் உண்மை நிலையை அம்பலப்படுத்த ஊடகவியலாளர் ஒன்றியம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை 'உதயன்' பணிவோடு முன்வைக்கிறான்.

### மிரட்டல் பலிக்காது

8. வேறு இரு பத்திரிகைகளோடு உதயனைத் தொடர்புபடுத்தும் அமைச்சரின் கூற்று இவ்விடயத்துடன் பொருத்தமற்றது. வழமைபோல அமைச்சரின் அபாண்டமான குற்றச்சாட்டும்கூட. அந்தப் பத்திரிகைகளில் ஒன்று தேர்தல் காலத்தில் தனக்கெதிராகச் செயல்பட்டது என்பதற்காக அதனையும் அதன செய்தியாளர்களையும் பொலிஸுக்கு இழுத்து, மிரட்டியதை மறந்துவிட்டு - மறைத்துவிட்டு - 'உதயன்' ஏதோ நெருக்கடி கொடுத்ததாக அமைச்சர் கதைவிடுவது வியப்புக்குரியது.

முன்னாள் அமைச்சர் டக்ளஸுக்கு தான் பதிலடி கொடுத்ததாக வீரம் பேசி, அதனைக் காட்டி உதயனை மிரட்டப் பார்க்கின்றார் அமைச்சர் மகேஸ்வரன்.

இதில் இரண்டு விடயங்கள். முன்னாள் அமைச்சர் டக்ளஸோடு அரசியல் ரீதியில் மோதிய அமைச்சர் மகேஸவரனின் துணிவை இன்றும் 'உதயன்' மெச்சுகின்றான். ஆனால் 'தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்குகின்றேன்' என்று தேர்தலுக்கு முன்னரே அறிக்கையுடன் மனம் சோர்ந்து, 'உதயன்' அலுவலகத்துக்குவந்த திரு.மகேஸ்வரனுக்கு பின்னர் போட்டியிடும் துணிவும் திடமும் உணர்வும் எங்கிருந்து வந்தன என்பதை அவர் சிந்தித்துப்பார்த்தால், தனது தற்போதைய இத்தகைய மிரட்டல் பலிக்காது என்பது அவருக்குப் புரியும்.

'தீட்டிய மரத்தில் கூர்பார்ப்பது போன்ற' அவரது சவால் பேச்சுக்கு அஞ்சும் நிலையில் 'உதயன்' இல்லை.

அரசியல்வாதி டக்ளஸ் தேவானந்தாவும் உதயனும் ஒன்று என அமைச்சர் மகேஸ்வரன் கருதுவது அவரது அறிவீனத்தின் வெளிப்பாடுதான்.

இவ்வாறு கடந்த 18 ஆண்டு காலத்தில் உதயனை மிரட்டிய பல அரசியல்வாதிகள் இன்று விலாசமே இல்லாமல் தடுமாறுகின்றார்கள். ஆனால, 'உதயன்' இன்றும் - என்றும் - நிலைத்து நிற்பான்.

'உதயன்' 'பனங்காட்டு நரி. சலசலப்புக்கு அஞ்சான்.

ஆயுதங்களுடன் வந்தும் கூட உதயனை மிரட்டியவர்கள் பலர். அவர்கள் போல் அமைச்சர் மகேஸ்வரனும் 'அட்ரஸ்' இல்லாதவராகிவிடக் கூடாது என்ற எதிர்பார்ப்பில்தான் பல தவறுகளை 'உதயன்' சுட்டிக்காட்டுகிறான். அமைச்சர் மகேஸ்வரனைப் பொறுத்தவரையில் அப்படி சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் தனக்கு உண்டு என 'உதயன்' கருதுகிறான்.

### புரட்டு செல்லுபடியாகாது

இதே சமயம் -

கடந்த மே 9 ஆம் திகதி இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு நல்லை ஆதீனத்தில் ஆரம்பமான பிராந்திய மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சமயம் அமைச்சர் மகேஸ்வரன் ஆற்றிய உரையின் விவரம் அடுத்தநாள் உதயனில் வெளியாகியிருந்தது.

அதில் "உதயனே! உன்னை நான் நேசிப்பதற்கும் தயாராக இல்லை. உன்னை இழிவு படுத்துவதற்கு நாங்கள் தயாராகிக் கொண்டிருக்கிறோம் என்பதை செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார் மகேஸ்வரன்.

அந்த முயற்சியை அவர் இப்போது ஆரம்பித்திருக்கிறார் அவ்வளவே.

அடுத்தடுத்துப் பொய்களைக் கூறி வர்த்தகத்தில் நுகர்வோரை ஏமாற்றலாம் ஆனால், விடுதலை அரசியலில் வீறு கொண்டிருக்கும் நமது மக்களிடம். அந்தப் பொய், புரட்டு, அபாண்டம், எல்லாம் செல்லுபடியாகாது என்பதை அமைச்சர் புரிந்துகொள்வது நல்லது.

# பொலிவியாவில் 15 அமைச்சர்கள் திடீர் இராஜினாமா! தொடரும் கலவரத்தில் இருபது பேர் நேற்று உயிரிழப்பு!!

லாவா,ஒக்.15

பொலிவிய ஜனாதிபதியை பதவி விலகக் கோரி 15 அமைச்சர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர். இதனால், அங்கு நடைபெற்றுவரும் இயற்கை வாயுவை விற்பதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மேலும் சூடுபிடித்திருக்கின்றது.

ஆர்ப்பாட்டங்கள் சில இடங்களில் கலவரங்களாகவும் வெடித்திருக்கின்றன. நேற்று நடைபெற்ற கலவரத்தில் கட்டடமொன்றினுள் இருந்த 14 பேர் தீ மூட்டிக் கொளுத்தப்பட்டனர். இதில் ஏராளமானோர் எரிகாயத்திற்கு இலக்காகினர்.

கடந்த வாரம் முதல் அங்கு நடைபெற்றுவரும் கலவரங்களால் இதுவரை 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று ஆர்ப்பாட்டகாரர்களுக்கு ஜனாதிபதி லொசாடா தொலைக்காட்சி மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.



மக்கள் ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க பொலீஸார் கண்ணீர் புகைக்குண்டு ஏவும் காட்சி.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கலகத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க கலகமடக்கும் பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். சில இடங்களில் பொலீஸார் கடும் தாக்குதல் நடத்தியதால் பலர் கொல்லப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

கலகத்தை அடக்க எண்ணற்ற கண்ணீர்ப் புகைக் குண்டுகளும், இறப்பர் குண்டுகளும் இதுவரை வெடிக்க வைக்கப்பட்டிருக்கின்றன.

பொலிவியாவில் இருந்து அமெரிக்காவுக்கும் அதனை அண்டியுள்ள நாடுகளுக்கும் இயற்கை வாயுவை ஏற்றுமதி செய்யக்கூடாது எனக் கோரியே அங்கு தொடர் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தொடர்நது ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றால் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

## நேபாளத்தில் சண்டை தொடர்கிறது

காத்மண்டு,ஒக்.15

நேபாளத்தில் மாவோஸ் தீவிரவாதிகளுக்கும் பொதுமக்களுக்குமிடையே கடும சண்டை தொடர்ந்து நடைபெறுகின்றது. நேற்றுமுன்தினம் நடந்த சண்டையில் மட்டும் 63 பேர் கொல்லப்பட்டனர்; ஏராளமானோர் காயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குள்ள பொலஸ் நிலையத்தை முற்றுகையிட்ட தீவிரவாதிகளை பொலீஸார் கடுமையாகத் தாக்கியதில் 50 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மீண்டும் அங்குள்ள பொலஸ் நிலையம் ஒன்றைத் தாக்கினர்.

இத்தாக்குதலில் பொலஸ் நிலையம் தரைமட்டமானது. அங்கிருந்த பொலீஸார் பொலீஸ் தலைமையகத்தை விட்டு தப்பிச்சென்றனர்.

தற்போது அப்பகுதி முழுவதும் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

## நிலவில் உள்ள தரைகளை விற்கிறார் ஆஸ்திரேலியர்!

நிலவில் உள்ள வெற்றுத் தரைகளை விற்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த போல் ஜாக்ஸன் என்பவர். அங்கு ஒரு ஏக்கர் நிலத்தின் விலை 3600 ரூபா மட்டுமே என்று அவர் அறிவிதத்திருக்கிறார்

மெல்பேர்ன் நகரில் வசிக்கும் இவர் நிலவில் உள்ள தரைகளை விற்பதற்கான ஆஸ்திரேலிய உரிமையை தான் பெற்றிருப்பதாகவும் கூறியுள்ளார். இந்த உரிமையை இவர் அமெரிக்கர் ஒருவரிடம் இருந்து பெற்றுக் கொண்டாராம்.

நிலவுக்குள் விண்கலங்கள் அனுப்பத்தொடங்கிய காலத்தில் 1967இல் ஐ.நா. சபையில் ஓர் உடன்பாடு காணப்பட்டது. அதன்படி 'விண்வெளியில் உள்ள எந்த இடத்துக்கும் எந்த நாடும் உரிமை கோரமுடியாது' என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த உடன்பாட்டில் நாடுகளின் உரிமை பற்றி கூறப்பட்டபோதும் தனிநபர்களின் உரிமை பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இந்த ஓட்டையைப் பயன்படுத்தியே நிலவில் உள்ள தரைகளை விற்கும் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார் போல் ஜாக்ஸன், 1980ஆம் ஆண்டு முதல் நிலவில் உள்ள தரைகளுக்கு ஏகபோக உரிமை கொண்டாடி வருகிறார் அமெரிக்கரான டெனிஸ் ஹோப்.

இவரிடமிருந்து ஆஸ்திரேலியர்களுக்கு நிலவில் தரைகளை விற்பதற்கான உரிமையை பெற்றிருக்கிறார் போல் ஜாக்ஸன். இதுவரை இவர்கள் இருவரிடமும் இருந்து 180 நாடுகளைச் சேர்ந்த இருபது லட்சம் பேர் நிலவில் உள்ள தரைகளை வாங்கியுள்ளனர். (ஐ)

## 202 பேர் பலியானதற்கு வருத்தப்படவில்லை; மரணதண்டனை விதிக்கப்பட்ட சமுத்ரா தெரிவிப்பு

'பாலிதீவில் குண்டுவெடித்து 202 பேர் பலியானதற்காக நான் வருத்தப்படவில்லை' என இச்சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளி இமாம் சமுத்ரா தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவில் உள்ள பாலி தீவில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி இரவு நேர களியாட்ட விடுதியில் இரண்டு சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் வெடித்ததில் 202 பேர் பலியானார்கள்.

அல்கெய்டா அமைப்புடன் தொடர்புடைய 'ஜெம்மா இஸ்லாமியா' என்ற தீவிரவாத அமைப்பே இந்தக் குண்டுத் தாக்குதலை அரங்கேற்றியது. இது தொடர்பாக 40பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 20பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் இமாம் சமுத்ரா மற்றும் மூன்று பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாலி வெடிகுண்டு சம்பவம் குறித்து மரணதண்டனை விதிக்கப்பட்ட இமாம் சமுத்ரா கூறியதாவது:-

பாலிதீவில் குண்டு வைக்கவேண்டும் என்பது அல்லாவின் விருப்பம். அதைத்தான் நான் நிறைவேற்றியுள்ளேன். இந்த சம்பவத்தில் 202 பேர் கொல்லப்பட்டதற்காக நான் வருத்தப்படவில்லை. இதற்காக எனக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதையும் நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

சொல்லப் போனால், இந்த மரண தண்டனை மூலம் கடவுளின் நம்பிக்கை வலுப்பட்டுள்ளது. நான் கடவுளுக்காக தியாகியாகியுள்ளேன். அல்லாவுக்காக நான் கடமையாற்றியதற்காக எனக்கு சொர்க்கம் கிடைக்கப் போகிறது. கடவுளின் சட்டத்தை நான் மீறியதற்காக என்னை சிறையில் அடைக்கவில்லை. கடவுளின் எதிரிகளைத் தான் நான் கொன்றுள்ளேன்.

- இவ்வாறு சமுத்ரா கூறியுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னா சமுத்ரா அளித்த பேட்டி தற்போது இந்தோனேஷிய பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## திருமண உற்சாகத்தில் விபரீதம்: விமானம் தீப்பிடித்து விழுந்தது!

சைபீரியா நாட்டில் திருமண நிகழ்ச்சியின்போது உற்சாக மிகுதியில் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கியால் சுடுவது வழக்கம். இது போன்ற ஒரு திருமண நிகழ்ச்சி மத்திய சைபீரியாவில் நடந்தபோது ஒருவர் தனது கைத்துப்பாக்கியை எடுத்து சுட்டார்.

அந்த நேரத்தில் வானத்தில் பறந்துகொண்டிருந்த குட்டி விமானம் மீது குண்டு பாய்ந்தது. இதில் விமானம் தீப்பிடித்து கீழே விழுந்தது. அருகில இருந்த மின்சார கம்பி மீது விழுந்ததால் விமானம் பெரும் சேதம் அடைந்தது. ஆனால், இந்த விபத்தில் உயிரிழப்பு ஏற்படவில்லை. இருவர் காயங்களுடன் உயிர் தப்பினர். கடந்த சில வருடங்களுக்கு முன்பு இதுபோன்று நடந்த ஒரு சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்தனர். எனினும், சைபீரியர்கள் திருமணவைபவத்தில் துப்பாக்கியால் சுடும் வழக்கத்தை கைவிட மறுத்து வருகின்றனர். (ஐ)

## ஆப்கானின் அனைத்துப் பகுதிகளுக்கும் அமைதிப் படையை நகர்த்த அனுமதி!

### பாரிய சண்டைகள் மூளும் அபாயம்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலுக்கு வெளியேயுள்ள பகுதிகளிலும் இனிமேல் சர்வதேச அமைதிப்படை பணிகளில் ஈடுபடும். இதற்கான அனுமதியை ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏகமனதாக வழங்கியிருக்கிறது.

காபூலை விட்டு வெளியேயுள்ள பகுதிகளுக்கு அமைதிப் படையினர் தமது நடவடிக்கைகளை நகர்த்தினால், அது பாரிய சண்டைக்கு வழிவகுக்கக் கூடும் என்று இராணுவ ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆயினும், அங்குள்ள சர்வதேச அமைதிப்படையினர் தமது நடவடிக்கைகளை ஆப்கானிஸ்தானின் அனைத்துப் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

முதற்கட்டமாக ஆப்கானிஸ்தானின வடபகுதி நகரான குண்டுஸிற்கு அமைதிப்படை நகர்த்தப்படவுள்ளது. குறிப்பாக அமைதிப் படையில் அங்கம் வகிக்கும் ஜேர்மனிய துருப்பினரே அங்கு நகர்த்தப்படுவர் என்று தெரிய வருகிறது.

அடுத்த கட்டமாக கந்தகாருக்கும் பின்னர் ஏனைய இடங்களுக்கும் அமைதிப் படையினரை அனுப்ப முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தலைநகர் காபூலுக்கு வெளியே தலிபான்களும், அல்-கெய்டா தீவிரவாதிகளும் நாளாந்தம் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால், சர்வதேச அமைதிப் படையினர் தலைநகருக்கு வெளியேயும் தமது நடவடிக் கைகளை முடக்கிவிடவேண்டும் என்று ஜனாதிபதி கர்சாய், ஐ.நா. பொதுச் சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த வேண்டுகோளை பரிசீலித்த ஐ.நா. அதற்கான அனுமதியை அமைதிப்படைக்கு வழங்கியிருக்கிறது.

காபூலுக்கு வெளியே நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக மேலதிக துருப்பினர் ஆப்கானிஸ்தானுக்கு வரவழைக்கப்படவுள்ளனர். முதல் கட்டமாக 450 ஜேர்மனிய துருப்பினர் அங்கு செல்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேறு எந்தந்த நாடுகளில் இருந்து துருப்பினர் ஆப்கானுக்கு வரவழைக்கப்படுவர் என்பது குறித்து எதுவும் தெரியவில்லை. எனினும் மேலதிகமாக 10,000 துருப்பினர் அங்கு அனுப்பப்படுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.



## சீனாவில் எழுபது ஆண்டுகளில் 10 தொன் மண் சாப்பிட்ட மூதாட்டி

சீனாவில் 78 வயது மூதாட்டி கடந்த 70 ஆண்டுகளில் 10 தொன் மண் சாப்பிட்டுள்ளார் என்று 'தி சௌத் சீனா மோர்னிங் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஹூபெங்க்லான் என்ற அந்த மூதாட்டிக்கு 8 வயதிலிருந்தே மண் சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டது.

தினமும் ஒரு வேளையாவது மண் சாப்பிடா விட்டால் ஏதோ உடல் நலக்குறைவு ஏற்பட்டது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படுகிறதாம்.

70 ஆண்டுகளாக மண் சாப்பிட்டபோதிலும் இதுவரை அவருக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை. நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார் என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)


இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம் அபிவிருத்தி நிதிக்காக

S.G. சாந்தன் முதன்முதலாக ராகம்ஸ் இசைக் குழுவினருடன் இணைந்து வழங்கும்

மாபெரும் நட்சத்திர இரவு

இன்றே இலவச நுழைவுச் சீட்டுக்கு முந்துங்கள்!

இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்.

காலம் :- 24.10.2003 (தீபாவளி தினம்) மாலை 6.30.

ரூபா 1500இற்கு மேற்பட்ட பெறுமதியான புடைவைகளை வாங்கி இலவச நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடங்கள்

கணேசன் சென்ரர், கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

சோதி ரெக்ஸ்ரைல்ஸ், 21, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

சியாமாஸ் ரெக்ஸ்ரைல்ஸ் & ரெயிலறிங், 1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வாணி ரெக்ஸ், 81, பெரியகடை, யாழ்ப்பாணம்.

மகாநதி புடைவையகம், 16, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

இளவரசி சேலைச் சோலை, 57, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

லிட்டில் இந்தியன் பெசன், 77, பெரியகடை, யாழ்ப்பாணம்.

சாந்தி புடைவையகம், 157,158, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சீமாட்டி புடைவைக்கடல், 15, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

கோபிகா ஆடையகம், நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

## வாழ்த்துகிறோம்

எமது கல்லூரி இசையாசிரியை
திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் செல்வப் புதல்வன்
**செல்வன் ரஜீந்திரன் சுரஸாகித்யன்**
தேசிய மட்ட தமிழ்தினப் போட்டியில் தனிஇசை மூன்றாம் பிரிவில் முதலிடம் பெற்றமையைப் பாராட்டுவதோடு, அவர் மேலும் பல வெற்றிகளைப் பெற்று சிறப்பாகக் கலைப் பணிபுரிய வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(23658) (21-15-17)

## தேவை

**வைத்திய ஆய்வகப் பொறுப்பாளர்**
(MLT)

வவுனியாவில் நவீன தொழில்நுட்பங்களுடைய ஆய்வகத்திற்கு MLT - நிர்வாக மேற்பார்வைக்கு ஆள் தேவை. தங்குமிடம் இலவசம். வேதனம் பேசித் தீர்க்கலாம்.

தொடர்பு:
**வெஸ்கோ யாழ். மருந்தகம்,**
470, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 222 3188
(21-15-17) (23657)


## நெஞ்சை விட்டு அகலாத
## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
1928 - 01 - 17



மறைவு
2002 - 09 - 26

### திருமதி நாகரத்தினம் சிதம்பரம்

அன்பு நிறைந்த அம்மா!
ஓர் இலையின் உதிர்வைப் போல
ஒரு கிளையின் முறிவைப் போல
உம் பிரிவினை உணரோம்
உறவுகள் நிறைந்த
பெரு விருட்சத்தின் வேர் நீர்!
உம் நினைவுகளை என்றும்
விழுதுகளாய்த் தாங்கி நிற்போம்.

(21-15-17)

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்
(23632)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பொன்னையா

(ஓய்வுபெற்ற அஞ்சலர், நெடுந்தீவு-04)

நெடுந்தீவு மேற்கு, 4 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னையா அவர்கள் 14.10.2003 செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காமாட்சியின் அன்புக் கணவரும் ஜெயகுமார் (ஜெயகலா ஸ்ரோர்ஸ், வவுனியா), கிருஷ்ணகுமார் (அஞ்சலர், நெடுந்தீவு அஞ்சலகம்), கிருஷ்ணகுமாரி (நெடுந்தீவு), இந்திரகுமார் (சிற்றி கிளினிக்), பரமேஸ்வரகுமாரி (வவுனியா) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் கலாறஞ்சினி (வவுனியா), அனுசியா (உடுவில் மகளிர் கல்லூரி), வசீபா, உலகேஸ்வரன் (சந்தக்கடை) ஆகியோரின் அருமை மாமனாரும் மிலான், கேமன், சோபன், பிரசாந்த், பிரியங்கா, சாரங்கா, துசாரங்கா, அருளங்கா, துஸ்யந்தன், ஆகியோரின் அன்புப் பேரனாரும் கந்தையா, பார்பதிப்பிள்ளை, கனகம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற காமாட்சி, துரையப்பா, இராமநாதர் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2003) புதன்கிழமை நண்பகலில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெடுந்தீவு தெற்கு இந்து மயானத்துக்கு பிற்பகல் 2.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.
(23659) (21-15-17)

தகவல்:
பொ.கிருஸ்ணகுமார் (மகன்)

# விழிப்புலனற்றோருக்கு வாழ்வு வழங்கிய வெள்ளைப்பிரம்பு

**வெள்ளைப்பிரம்பு தினம்
ஒக்ரோபர் 15**

உலகத்திலே எத்தனையோ படைப்புக்கள். இறைவன் ஒவ்வொருவரையும ஒவ்வொரு விதமாகப் படைத்துள்ளான். அந்த வகையில் விழிப்புலன் அற்றவர்கள், செவிப்புலன் அற்றவர்கள், கை, கால் ஊனமுற்றவர்கள் என்று இன்னும் எத்தனையோ வகையிலானவர்களும் இறைவனின் சிருஷ்டியே.

இவற்றுள் விழிப்புல வலுவிழந்தவர்களையே நாம் முதலில் கவனத்தில் எடுக்கவேண்டும் ஏனெனில், இந்த வையகத்தில் அவர்களுக்குப் பார்ப்பதற்கு கண்ணொளி இல்லை. ஏனோ தெரியவில்லை இறைவன் இவர்களுககுக் காண்ணொளியைக் கொடுக்க மறந்து விட்டான்.

விழிப்புல வலுவிழந்தவர்களை ஆரம்ப காலத்தில் சமுதாயம் புறக்கணித்தது ஏன்? வீட்டில் கூட முடக்கி வைத்தார்கள். அவர்களை ஒரு சடப் பொருளாகவே கருதினார்கள். விழிப்புலன் இழந்த ஒரு பிள்ளையை தன்னுடைய பிள்ளை என்று கூறவே பெற்றோர்கள் அச்சப்பட்ட காலமொன்றுள்ளது.

*" வாழ்வின் ஒரு கதவு பூட்டிக்*
*கொண்டால்*
*இன்னொரு கதவு திறந்து*
*கொள்ளும்.*
*இது இயற்கை நியதி.*
*பிறகு நாம் ஏன் உபத்திரவப்*
*படுகிறோம்?*
*காரணம் இதுதான்*
*திறந்த கதவை நாம் பார்ப்பதில்லை*
*பூட்டிக் கொண்ட கதவைப் பற்றிய*
*ஆசையும், அழுகையுமாகவே*
*இருக்கின்றோம்"*

இந்த நிலைதான் விழிப்புல வலுவிழந்தவர்களுக்கு ஏற்பட்ட ஆரம்ப நிலை. இவற்றின் காரணமாகவே விழிப்புலன் அற்றவர்களுடைய ஆசைகள், கனவுகள், விருப்புக்கள், வெறுப்புக்கள், அவர்களுடைய ஆற்றல்கள், திறமைகள் என்பன சுக்குநூறாக்கப்பட்டன. அவர்களுடைய எதிர்காலம்கூட கேள்விக்குறியாகவே காணப்பட்டது. இதன காரணமாக விழிப்புலன் அற்றவர்களின் ஆரம்பகால சமூகப் பார்வையானது பயம் கொண்டதாகவே காணபட்டது.

இதன் பின்னர் நிலைமை சற்று மாற்றம் அடைந்தது. சமுதாயத்தில் விழிப்புலன் அற்றவர்களை அனுதாபக் கண்கொண்டு பார்க்க முடிந்தது. இந்த நிலையில்தான் சமுதாயத்தில் விழிப்புலன் அற்றவர்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்ட வேண்டுமென்ற பேரவா பல பெரியார்களதும் அறிஞர்களதும் மனதிலே எழுந்தது.

"முயற்சி திருவினையாக்கும்" என்ற பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவரின் கூற்றுக்கு அமைவாகவும் பல அறிஞர்களுடைய உந்துதலினாலும் விழிப்புலன் அற்றவர்களும், விழிப்புலனுடைய சாதாரண மக்களும் விழித்துக் கொண்டார்கள். இதன் பயனாக விழிப்புல வலுவிழந்தோரில் பலர் கற்கவேண்டுமென எண்ணினார்கள். இறைவன் எமக்கு கண்ணொளியைத் தர மறந்தால் என்ன? கண்ணொளி இல்லை. ஞான ஒளி நிறையவே உண்டு என்ற புளகாங்கிதத்தோடு என்றுமே துன்பமற்ற மகிழ்ச்சியோடு வாழலாம் என வலுவிழந்தவர்கள் எண்ணினார்கள்.

விழிப்புல வலுவிழந்தவர்களின் இந்த நல்ல எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வர அவர்களுக்குத் தடைகள் பல காணப்பட்டன. அத்தடைகளை உடைத்தெறிய அறிஞர் லூயிபிறையில் என்ற ஒருவரால் விழிப்புலன் இழந்தவர்களுக்கென 'பிறெயில்' குற்றெழுத்து கண்டுபிடிக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் இந்த 'பிறெயில்' எழுத்து வலுப்பெற்றது.

விழிப்புலன் அற்றவர்கள் தனியாகச் சென்று பயணங்களை மேற்கொள்வதில் பெரிய சங்கடம் ஏற்பட்டது. இச்சங்கடத்தைத் தீர்த்து வைக்கும் வகையிலேதான் லயன்ஸ் கழகத்தினரால் 'வெள்ளைப் பிரம்பு' அறிமுகப் படுத்தப்பட்டது.

பார்வை அற்றோரின் ஒரு சின்னமாக உலகம் முழுவதும் வெள்ளைப பிரம்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த வகையில் வெள்ளைப்பிரம்பு தினமாக ஒக்ரோபர் பதினைந்தை சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தினார்கள்.

விழிப்புலன் அற்றவர்களின் சின்னமாக, வழிகாட்டியாக அமைகின்ற இந்த வெள்ளைப்பிரம்பானது அவர்களுடைய வாழ்க்கைக்கே ஒரு ஊன்றுகோலாக உள்ளது. இதன் காரணமாகவோ என்னவோ விழிப்புல வலுவிழந்த சங்கீத ஆசிரியர் ஒருவரின் வழிகாட்டலில் விழிப்புல வலுவிழந்த ஒரு மாணவன் இப்படிப் பாடினார்.

*எமக்காக அழ வேண்டாம்.*
*எமைக்கண்டு அனுதாபம் தர*
*வேண்டாம்.*
*எமை மதித்தால் போதும்*
*உபகாரம்*
*நீர் காட்டும் அனுதாபம்*
*எம்மைக் கோழை ஆக்கிடும்.*
*எம் வாழ்வின் முன்னேற்றம்*
*அதனால் தடைப்படும்.*
*வெண்பிரம்பொன்று இங்கு*
*எம்மை வழி காட்டிடும்.*
*எம் வாழ்வின் பயணங்கள்*
*அதனால் தொடர்ந்திடும்"*

என மிகவும் அழகான இந்தப் பாடல் எனது காதுகளிலும் புகுந்து மெய் சிலிர்க்கச் செய்திடும். இப்படி வெள்ளைப்பிரம்பு விழிப்புல வலுவிழந்தவர்களின் இரு கண்ணெனக் கூறின் ஐயமில்லை.

**பிரதீபா சிவஞானசுந்தரம்**
**தரம் 13, யூனியன் கல்லூரி**

இப்படிப்பட்ட வெண்பிரம்பை வெள்ளைப்பிரம்பு தினத்தன்று வாழி வாழி என்று மனமார வாழ்த்துவதிலும், விழிப்புல வலு இழந்தவர்கள் மேன் மேலும் இந்த உலகத்திலே *"தோன்றிற் புகழோடு தோன்றுக"* என்ற குறளுக்கமைய பெரும் புகழோடுவாழ வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## வாசகர் திருமுகம்

### சட்டம் ஒழுங்கை கேலிக்கூத்தாக்காதீர்!

அரசியல்வாதிகள் அறிக்கைகள் மேல் அறிக்கைகள் விட்டு அரசியலையே கேலிக்கூத்தாக்கினர். அரசியல்வாதிகளின் அறிக்கைகளெல்லாம் லெற்யூலேட்டுக்கள். மக்களின் முதுகில் சவாரி விடுவதற்காக வெளியிடப்பட்டவை என்பது மக்கள் அறிந்த உண்மை.

இப்பொழுது சட்டம் ஒழுங்கைப் பேணுபவர்கள் அறிக்கைகள் விட்டுக கொண்டிருக்கிறார்கள். சமாந்தரமாக தெருக்களில் சவாரி செய்யக்கூடாது. வேகமாகப் போகக்கூடாது, தலைக்கவசமில்லாமல் மோட்டார் சைக்கிளில் போகக்கூடாது. தகுந்த ஆவணங்கள் இல்லாமல் போகக்கூடாது. ஒன்றுடன் ஒன்று பிடித்துக்கொண்டு போகக்கூடாது. மூவர் மோட்டார் சைக்கிளில் போகக்கூடாது என்று அறிக்கைகள் மேல் அறிக்கைகள் வந்துவிட்டன. இவற்றைப் பார்த்து 'இனி எல்லாம் சரி, தெருவில் நிம்மதியாகப் போகலாம்' என்று நினைத்து தெருவில் இறங்கினால் அங்கு எல்லாமே பிழையாகத்தான் இருக்கிறது. சட்ட மீறல்களும் விபத்துக்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. கேட்பாரில்லை. இந்த அறிக்கைகளும் அரசியல்வாதிகளின் அறிக்கைகள் போல லெற்யூலேட்டுக்கள் தானா எனப் பெருமூச்சு அடைய வேண்டியிருக்கிறது.

அரசியல்வாதிகள் அரசியலைக் கேலிக்கூத்தாக்கிய மாதிரி சட்டம், ஒழுங்கை கேலிக்கூத்தாக்குவது மிகவும் ஆபத்தானது. அராஜகம் ஏற்பட வழிவகுக்கும்.

லெற்யூலேட்டு அறிக்கைகள் விட்டு காலத்தையும் மக்களின் உயிர்களையும் விரயமாக்காமல் உருப்படியாக ஏதாவது செய்து சட்டம், ஒழுங்கை சம்பந்தப்பட்டவர்கள் பேணுவார்களாக.

சுன்னாகம்.
\- பரமன்.

### பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் லாபத்தில் இயங்க வழி என்ன?

2003.09.18ஆம் திகதி வெளியாகிய தங்கள் பெருமதிப்புமிக்க "உதயன்" பத்திரிகையில் "கூட்டுறவுத்துறை லாபத்தில் இயங்குவதற்கு மாற்றங்கள் செய்யப்படவேண்டியது அவசியமா?" என்னும் தலைப்பில் சமாதான நீதிவான் சி.கிருஷ்ணபிள்ளை என்பவரினால் எழுதப்பட்ட கட்டுரையின் சில பகுதிகள் ஆழமான கவனத்துக்கும் உடன் நடவடிக்கைக்கும் உரியவைகளாகும்.

தரமற்ற நுகர்ச்சிப்பொருள்கள் விநியோகம், பணிப்பாளர் சபையின் நிர்வாகத்திறமையின்மை, ஊழல் நிர்வாகம், பணியாளர்கள் தன்னலம் கருதிச் சேவை செய்தல், போட்டி, பொறாமை, பணிப்பாளர் சபையில் இருந்தவர்கள்தான் இருக்கவேண்டும் என அடம்பிடித்து 10, 15 வருடங்கள் தொடர்ந்து இருப்பதால் ஊழல் நிர்வாகத்துக்கு வழிவகுத்தல் ஆகிய காரணங்களினால் சங்க நிர்வாகம் வீழ்ச்சியடைந்து நஷ்டததில் இயங்க சந்தர்ப்பம் ஏற்படுவது உண்மையே.

சில சங்கங்களில் நிர்வாகமும் பணியாளர்களும் சேர்ந்து நுகர்வுப் பொருள்களில் சோர்வு ஏற்படுத்திய சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளன.

யாழ் மாவட்டத்தில் வாரநாள்களில் ஆறு மணித்தியாலங்கள் மட்டுமே சங்கக் கிளைகளில் வியாபாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நண்பகல் உணவு இடைவேளை ஒரு மணித்தியாலமாகக் குறைப்பதுடன் காலையிலும் மாலையிலும் வியாபாரம் நடக்க வேண்டிய நேரம் அதிகரிக்கப்படல் வேண்டும்.

பணிப்பாளர் சபையில் ஒருவர் பதவி வகிக்கும் காலம் மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இதன்மூலம் ஊழல் நிர்வாகத்தைத தடுக்கலாம்.

சங்க நிர்வாகமும், மக்களும் மட்டுமல்லாமல் மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகளும் ஒருவரோடு ஒருவர் இணைந்து செயற்பட்டாலே சங்கங்களை நஷ்டத்தில் இருந்து காப்பாற்றலாம்.

மேற்கூறப்பட்ட முத்திறத்தாரும் இதைக் கவனத்துக்கு எடுப்பார்களா?

"கூட்டுறவாளன்"
குருநகர், யாழ்ப்பாணம்.




தித்திக்கும் தீபாவளியை முன்னிட்டு.....................!
உங்களுக்குத் தேவையான அனைத்து ஜவுளி, ஆடை, சாறி வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
**மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்**
0777 311488
10, மின்சார நிலைய வீதி,
பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(மலாயன் கபே முன்)
3000/= ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு சிறுவர்களுக்கான ஸ்கூல்பாக் 1 இலவசமாக வழங்கப்படும்.
(21-15-17) (C/30690)

# உதயன்

## மண்டை ஓடுகள் புதைந்த பூமி...!

* கொடூர யுத்தமும் அதையொட்டிய வன்செயல்களும் தொடர்ந்த காரணத்தால் 'மரணங்கள் மலிந்த பூமி' என்ற பெயர் நமது மண்ணுக்கு உண்டு. அதனை உறுதிப்படுத்துவது போல 'மண்டை ஓடுகள் புதைந்த பூமி' ஆகவும் அது தன்னை வெளிப்படுத்தி வருகின்றது.

இந்த வரிசையில் பெரும் எண்ணிக்கையான எலும்புக் கூடுகள் புதைக்கப்பட்ட மற்றொரு மனிதப் புதைகுழி பற்றிய தகவல் இப்போது வெளியாகியிருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் திராய்க்கேணி கிராமத்திலேயே மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. அக்குழியிலிருந்து 27 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருக்கின்றன.

1990 ஓகஸ்டில் திராய்க்கேணியில் இடம்பெற்ற சம்பவங்களின் போது 48 தமிழ்மக்கள் கட்டும், வெட்டியும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் எலும்புக்கூடுகளே தற்போது மீட்கப்பட்டவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரர் 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் 16 ஆவது நினைவு தினத்தையொட்டி - மகளிர் எழுச்சிநாளில் - திராய்க்கேணி மாரியம்மன் ஆலயச் சுற்றாடலில் பொது மக்கள் சிரமதானம் மேற்கொண்டனர். அப்போதே அங்கிருந்த பாரிய மரம் ஒன்றின் கீழான நிழல்பகுதியில் மனித மண்டையோடுகளும், எலும்புக் கூடுகளும் மண்வெட்டியில் தட்டுப்பட்டன. அதனையடுத்தே அங்கு மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

1990 காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக கொடூர கொலைவெறி நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. உடும்பன் குளத்தில் 60 பேரும், அம்பாறையில் 28 பேரும், கல்முனையில் 30 பேரும், காரைதீவில் 56 பேரும், திராக்கேணியில் 48 பேரும், திருமுனையில் 83 பேரும் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டனர் எனத் தெரியவந்துள்ளது. இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் சடலங்கள் புதைக்கப்பட்ட பாரிய குழிகளில் ஒன்றே தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

இதேபோன்று மேலும் இரு புதைகுழிகள் திராய்க்கேணிப் பகுதியில் இருப்பதாகத் தங்களுக்குத் தெரிய வந்துள்ளது எனவும், அவற்றையும் பகிரங்கமாக ஊடகவியலாளர் முன்னிலையில் தோண்டுவதற்குத் தாங்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளனர் எனவும் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்திருக்கின்றார்.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி குறித்து நீதி விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட எம்.பியான சந்திரநேரு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அவசரமாகக் கோரியிருக்கின்றார்.

ஆனால், அத்தகைய விசாரணைக்குழு அமைக்கப்பட்டாலும் தகுந்த பலன் கிட்டுமா? உண்மைகள் கண்டறியப்படுமா? குற்றம் இழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படும் நிலைமை ஏற்படுமா? அல்லது அத்தகைய விசாரணைக்குழு அமைப்பது வழமைபோல வெறுமனே காலத்தை இழுத்தடிக்கும் - கண்துடைப்பு - நடவடிக்கையாகவே முடியுமா? - இவையே இப்போதுள்ள கேள்விகளாகும்.

தென்னிலங்கையில் இரத்தினபுரி, சூரியகந்தையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி குறித்து விசாரணைகள் துரிதமாக நடத்தப்பட்டு, குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, தண்டனையும் வழங்கப்பட்டுவிட்டது.

ஆனால், செம்மணியில் யாழ். தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழி விவகாரம் கொழும்பில் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு, தவணை போடப்பட்டு விசாரணைகள் பல வருடங்களாக இழுத்தடிக்கப்படுகின்றன. யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் தோண்டப்பட்ட மனிதப்புதைகுழி விவகாரம் சுமார் 20பேரின் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் விவகாரம் எடுக்கப்படாமலேயே தூங்குகின்றது.

இந்நிலையில், திராய்க்கேணி மனிதப்புதைக்குழி குறித்து விசாரணை நடத்துவதற்கு ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டாலும் அதனால் பலனேதும் கிடைக்க வாய்ப்புண்டா என்ற சந்தேகம் எழுவது நியாயமானதே.

## காலத்தின் பதிவு



அழிவிலிருந்து மீட்சி... படம் : தீபன்

# சமயோசிதமாகச் செயற்பட்டதால் இழந்த நகைகளை பெற்றார் யுவதி!

யாழ்ப்பாணம், ஒக்.15

சமயோசிதமாகச் செயற்பட்டதனால் தனது கைப்பையிலிருந்து திருடப்பட்ட நகைகளை மீண்டும் பெற்றுக்கொண்டார் தனங்களப்பைச் சேர்ந்த யுவதி ஒருவர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்றுப் பகல் 11 மணியளவில் சாவச்சேரியில் இருந்து மினிபஸ்ஸில் ஏறிய மேற்படி யுவதியின் கைப்பையில் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் இருந்ததாகச் தெரிவிக்கப்பட்டது.

இந்த நகைகள் யுவதிக்குத் தெரியாமலே பஸ்ஸில் வைத்து திருடப்பட்டுள்ளன. இதனை அறியாத அவர், கைதடிப் பாலத்தடியில் இறங்கியுள்ளார். அதன் பின்னரே தனது கைப்பையில் இருந்த நகைகள் திருடப்பட்டுள்ளமையை அவதானித்துள்ளார். கைப்பையினுள் இருந்த சங்கிலி, அட்டியல், மூன்று சோடி தோடுகள் மற்றும் 300 ரூபா பணம் என்பன காணாமல் போயிருந்தன.

ஆயினும், உடனே பதறியடிக்காமல் அவர் சமயோசிதமாகச் செயற்பட்டார். உடனே ஒரு மினிபஸ்ஸில் ஏறி வந்து தான் முன்னர் பயணித்த மினிபஸ்ஸை பின் தொடர்ந்தார். கைதடிச் சந்திக்கருகில் அவர் தான் முன்னர் பயணித்த மினிபஸ்ஸை தடுத்து நிறுத்தினார். அதன் நடத்துநரிடம் விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, குறிப்பிட்ட மினிபஸ்ஸில் இருந்த எவரையும் நடத்துநர் எங்கும் இறங்க அனுமதிக்கவில்லை. மினிபஸ் நேரே யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது.

பொலீஸார் மினிபஸ்ஸில் வந்த ஒவ்வொருவரையும் சோதனையிட்டனர். சோதனை நடந்துகொண்டிருந்த போது உள்ளே இருந்த ஒருவர் திடீரென நகைகள் இங்கே கிடக்கின்றன என்று தெரிவித்தார். அதேபோல் நகைகளும் பணமும் மினிபஸ் இருக்கைகளின் கீழ் இருந்து மீட்கப்பட்டன. யுவதியின் கைப்பையில் இருந்து நகைகளும் பணமும் தவறி வீழ்வதற்கான சாத்தியக் கூறுகள் எவையும் இல்லை என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

நகைகளைத் திருடியவர் பொலீஸ் நிலையத்தில் தன் குட்டு வெளிப்பட்டுவிடக்கூடும் என்பதால் அவற்றைப் பின்னர் இருக்கைகளின் கீழ் வீசி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

விடயத்தைக் கேள்விப்பட்டதும் மினிபஸ்ஸை நேராகப் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்ற சாரதி மற்றும் நடத்துநரின் செயலைப் பொதுமக்கள் பெரிதும் பாராட்டினர்.

(ம-10)

# புலிகளின் இடைக்கால நிர்வாகத்தில் சிறுபான்மையினருக்குப் பாதிப்பு இருக்காது

## சந்திரநேரு எம்.பி. கூறுகிறார்

காரைதீவு,ஒக்15

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவு கிடைத்ததும் உடனடியாக அரசாங்கம் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும். இந்த இடைக்கால நிர்வாகத்தில் எந்த ஒரு சிறுபான்மையினரும் பாதிக்கப்படமாட்டார்கள். இது தொடர்பாக எவரும் அச்சப்படத் தேவையில்லை. முஸ்லிம், சிங்கள மக்களின் அதிகாரத்திற்காக நான் குரல் கொடுப்பேன்.

- இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, கல்முனை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவை திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.முருகானந்தம் தலைமையில் நடைபெற்ற விழாவில் நேரு எம்.பி. மேலும் கூறியதாவது:-

உலகில் சமாதானத்தைக் குழப்புகின்ற ஒரு கூட்டம் உள்ளதென்றால் அது ஜே.வி.பியினராகத்தான் இருப்பார்கள். அவர்கள் சமாதானத்தைக் குழப்பி நாட்டைக் கைப்பற்ற எண்ணுகிறார்கள். அதற்கு ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியும் ஒத்துழைக்கின்றது.

'ஆட்சிக்கு வந்தால் சமாதானத்தை கொண்டுவருவேன்' என்று கூறி பெரும்பாலான தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த சந்திரிகாவின் போலிவேடம் இன்று கலைந்துவிட்டது. இடைக்கால நிர்வாகம் என்ற அம்சத்தைக் கொண்டு வந்த அவரே இன்று அதை எதிர்த்து வருகிறார்.

கடந்த 13வருட யுத்தத்தால் தமிழ்ப் பிரதேசங்கள் முற்றாக அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டன. யுத்தத்தைச் சாட்டாக வைத்து தமிழர்களின் வேலைவாய்ப்பு, கல்வி, பிரதேச அபிவிருத்தி என்பன திட்டமிட்டு பாரபட்சத்துக்குள்ளாக்கப்பட்டன.

பெரும்பாலான தமிழ் வைத்தியர்கள் தமிழ்ப் பிரதேச வைத்தியசாலைகளுக்கு பணியாற்றத் தயங்குகிறார்கள். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் மதிப்புக்குரியது என்று படிக்கிறார்கள். பல சிரமங்களுக்கு மத்தியில் கஷ்டப்பட்டு தனது பிள்ளையை படிப்பித்து மருத்துவபீடத்திற்கு அனுப்புகிறார்கள். அதற்கு சமூகமும் உதவுகிறது. படித்து டாக்டராக வெளியேறியதும் தாயையும் மறந்து அந்தக் கிராமத்தையும் மறந்து அந்தச் சமூகத்தையும் மறந்து கொழுத்த சீதனத்தையும் பெரிய வீட்டையும் வாகனத்தையும் எதிர்பார்த்து நகரப்பகுதிகளை நாடிச்சென்று விடுகின்றனர்.

தமிழ் வைத்தியர்களின் மனநிலை மாறும்வரை தமிழ்ப் பிரதேச வைத்தியசாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை நீங்கப்போவதில்லை. அது ஒரு தீராத வியாதியாக இருக்கும்.

முஸ்லிம்கள் நல்லவர்கள். அவர்களுக்கு நான் விரோதியல்ல. தமிழ் - முஸ்லிம் மக்களிடையே எந்தவித பிரச்சினையுமில்லை. சில அரசியல்வாதிகள் இரு சமூகத்தவர்களையும் குழப்புகிறார்கள் - இப்படி அவர் தனதுரையில் கூறினார்.(ஜ)

| நாளை |
| --- |
| புரட்டாதி 29 |
| வியாழக்கிழமை |
| (16.10.2003) |
| திதி : ஷஷ்டி |
| நள்ளிரவு 12.17 வரை. |
| நட்சத்திரம்: மிருகசீரிடம் |
| முற்பகல்: 04.23 வரை. |
| சுபநேரம்: 7.32 - 9.02 |
| ராகுகாலம்: 1.32 - 3.02 |
| (பழைய நேரப்படி) |

**உதயவாக்கு**

பரிசுத்தமான இதயம் பெண்ணின் பெருமைச்சொத்து. காதல் அவளுடைய அழகிய ஆபரணம்.

# காலாவதியான உணவுப் பொருள்கள் ஆனைக்கோட்டையில் பறித்து அழிப்பு

ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள கடையொன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான உணவுப் பொருள்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின்போதே காலாவதியான பிஸ்கற் வகைகள் மற்றும் ரொபி வகைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து அவை யாவும் உடன் தீயிட்டு அழிக்கப்பட்டன. மேற்படி சம்பவத்தில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுகாதாரப் பரிசோதகர்களான ரி.இராஜரவீந்திரா, வை.தயாமோகன், செ.மனோகரன் ஆகியோர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-185)

# பேச்சுக்களில் முஸ்லிம் சமூகத்தை பிரதமர் புறந்தள்ளி விடமாட்டார்!

## இது நிச்சயம் என்று அடித்துக் கூறுகிறார் ஹக்கீம்

கல்முனை,ஒக்.15

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது அரசுக்கு உலை வைக்கப்படுவதை ஒருபோதும் விரும்பமாட்டார். எனவே, சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் சமூகத்தை அவர் புறந்தள்ளமாட்டார். இது நிச்சயம் என்று அடித்துக்கூறினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்ற கல்முனை நகர அபிவிருத்தி அங்குரார்ப்பண விழாவில் ஹக்கீம் பேசினார்.

பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகக் கலந்துகொள்வர். அது முன்னர் பிரபாகரனாலும் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் நோர்வே அனுசரணையாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும் ஹக்கீம் சொன்னார்.

ஹக்கீம் மேலும் பேசுகையில் புலிகள் தமது மாற்று ஆலோசனைகளைச் சமர்ப்பித்ததும் அவை முஸ்லிம் காங்கிரஸின் கவனத்துக்கு கொண்டுவரப்படும்.

முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும். அதன் பின்னரே பேச்சுகள் ஆரம்பமாகும். அவசியம் ஏற்படுமானால் எதிர்க்கட்சியினரான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரும் அரசாங்கக் குழுவில் உள்ளடக்கப்படுவர் என்று பிரதமர் தெரிவித்திருக்கிறார் எனவும் கூறினார்.

எனவே, நாம் ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு, நிதானம் தவறி நடக்கக் கூடாது. இந்த விடயத்தில் நாம் புலிகளின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் எத்தனையோ விட்டுக் கொடுப்புகளைச் செய்திருக்கிறார்கள். அரசு சமர்ப்பித்த ஆலோசனைகள் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று கண்டதும் அந்த ஆலோசனைகள் அடங்கிய ஆவணத்தை அவர்கள் கிழித்து எறியவில்லை. மாற்று ஆலோசனைகளைத் தயாரித்து அரசுக்குக் கொடுக்கிறார்கள் என்றும் ஹக்கீம் சுட்டிக் காட்டினார். (ம)

### முன்னோடி பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.15

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் தரம் 5மாணவர்களுக்கான புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சையும் இலவசக் கருத்தரங்கும் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

மக்கள் வங்கியின் சங்கானைக் கிளையின் அனுசரணையுடன் சங்கானை கல்விக்கோட்ட அதிபர் சங்கத்தால் இப்பரீட்சை நடத்தப்படுகிறது. (ம-10)

### மெய்கண்டதேவர் வாரம் அனுஷ்டிக்கக் கோரிக்கை

வவுனியா,ஒக்.15

மெய்கண்டதேவர் குருபூசைத் தினத்தையொட்டி எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் முதலாம் திகதி வரையான ஒரு வார காலத்தை அகில இலங்கை மெய்கண்டதேவர் வாரகாலமாக அனுஷ்டிக்குமாறு வவுனியா மெய்கண்டார் ஆதீனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக்காலப் பகுதியில் ஏதாவது ஒரு நாளில் ஆலயங்கள், கல்வி நிலையங்கள், சனசமூக நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் மெய்கண்டதேவர் திருநாளைக் கொண்டாடுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-10)

### சிறுவர்கள் துஷ்பிரயோகம்

சிறுவர் பாதுகாப்பு நிலையம் ஒன்றைச் சேர்ந்த சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய இரு பௌத்த குருமார் உட்படப் பத்துப் பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பை அண்டிய பகுதியில் உள்ள சிறுவர் பாதுகாப்பு நிலையம் ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையத்தில் பணியாற்றும் பௌத்த குருமார் இருவரும் ஏனைய ஊழியர்கள் எட்டுப் பேருமே சிறுவர்களைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 10பேரையும் தனிப்பட்ட விசாரணைசெய்த கொழும்பு நீதிமன்ற நீதிவான் பி.எஸ்.டி. பலல்லே அவர்களை இரண்டு வாரங்களுக்குத் தடுப்புக்காவலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், மேற்குறிப்பிட்ட சிறுவர்கள் 11பேரையும் வேறோரு பாதுகாப்பு நிலையத்துக்கு இடம்மாற்றுவதுடன், அவர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார் என்று கொழும்புத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-10-சி)

# மாவீரர் துயிலும் இலல புனரமைப்புப் பணி துரிதம்

வரணி,ஒக்.15

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவுக்கற்கள் பதிக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்தப் பணியில் பல இளைஞர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அடுத்த மாதம் 27ஆம் திகதி மாவீரர் தினம் ஆகையால் அதற்கு முன்னர் இப்பணிகளை முடிக்க வேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10-170)


**CD மலிவு விற்பனை**

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு புதிய, பழைய பாடல்கள் அடங்கிய

ஓடியோ CD / வீடியோ CD } 50/= முதல் 90/= வரை.

அன்றைய பராசக்தி முதல் இன்றைய கலாட்டா கணபதி வரையிலான சகல தமிழ்த் திரைப்பட CDகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பழைய படம் 170/= (21-15-19)

**AASIAN** ELECTRONICS CENTRE

(23509) No. 11/4, Stanley Road, Jaffna. ☎0777 - 785549, 222 - 5446


## பிறந்தநாள் நினைவும் 6ஆம் மாத நினைவலைகளும்

அன்னையின் மடியில் 15 - 10 - 1989



மண்ணின் மடியில் 14 - 04 - 2003

**செல்வன் ஆறுமுகராசா சுஜேந்தன்**
(டிறிபேர்க் கல்லூரி மாணவன்)

அன்பு மகனே! ஆசைக் கண்ணாவே!
ஆறுமாதம் ஆனாலும் ஆறுமா துயரம்?
பிறந்த நாள் பார்த்திருக்க
துயர நாளும் வந்ததுவோ?
அழுதழுது வாழுகின்றோம்
அதைத் தவிர வேறு வழியில்லை
உன்னிடம் வரும் வரை
உன் ஆத்ம சாந்திக்காய்
தினம் மலர் தூவி அஞ்சலிக்கும்....

தற்காலிக முகவரி:
சங்கம் வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.
நிரந்தர முகவரி:
தனங்களப்பு, சாவகச்சேரி.

உன் அன்பு:
அம்மா மற்றும்
அப்பா, அக்கா, தம்பி.

(23640)


## பணிநிலை வெற்றிடம்

"மௌவல் குழுமம்" (தனியார்) வரையறுக்கப்பட்ட [MOUVAL GROUP (PVT) LTD] நிறுவனத்தினால் கீழ்க் காட்டப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

1. பணிநிலை: இயந்திரவியல் முகாரி (MECHANICAL FOREMAN)
தகைமை: அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் (MOTOR MECHANISM) கற்கைநெறியைக் கற்றுத் தேர்ச்சியடைந்திருக்கவேண்டும்.
பட்டறிவு: 03 ஆண்டுகள் இயந்திரவியல் முகாரி (MECHANICAL FOREMAN) பட்டறிவு உட்பட 10 ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவினை இயந்திரவியல் (MECHANISM) துறையில் பெற்றிருக்கவேண்டும்.
அகவை: 50 ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.
சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

2. பணிநிலை: உற்பத்தி முகாமையாளர்
தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தொழில் நிர்வாகமாணி (முகாமைத்துவம்) கற்கைநெறியை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
பட்டறிவு: 03 ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவினை உற்பத்தித் துறையில் பெற்றிருக்கவேண்டும்.
அகவை: 35 ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.
சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வேண்டுகையர்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட தன் விளக்கத் (சுயவிவரம்)துடனும், தேவையான சான்றிதழ்களுடனும், இரண்டு (02) நற்சான்றிதழ்களுடனும் வரும் 2003 ஒக்ரோபர் 25 ஆம்நாள் பணிநிலை 01 இற்கு உரியவர்கள் காலை 10.00 மணிக்கும், பணிநிலை 02 இற்கு உரியவர்கள் மதியம் 2.00 மணிக்கும், **கந்தசாமி கோவிலடி, யாழ்.சாலை, கிளிநொச்சி** இல் அமைந்திருக்கும் "மௌவல் குழுமம்" (தனியார்) வரையறுக்கப்பட்ட [MOUVAL GROUP (PVT) LTD] நிறுவனத்திற்கு நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

முகாமைப் பணிப்பாளர்,
மௌவல் குழுமம்
(தனியார்) வரையறுக்கப்பட்டது,
கிளிநொச்சி. (23541) (25-21-15-19)



பொதுவான களைகள், வேர்த்தண்டுக் கிழங்குள்ள களைகளை சிறப்பாக கட்டுப்படுத்த

FINCHEM AGRO DIVISION



டிஸ்ட்ரோய்
பிரீன்கெம்

பீ.ஏ.எஸ்.எவ்.பிரீன்லே(பிரைவெட்) லிமிட்டெட்,
186, வொக்ஸ்சோல் வீதி,
கொழும்பு– 02

மேட்டு சேற்று நில விவசாயத்தை – காப்பாற்றும்

பீடைநாசினிகள் ஆபத்தானவை அவதானமாகக் கையாளுங்கள்

# இஸ்ரேலியர்களின் பிடிவாதத்தினால் ஆட்டங்காணும் மத்தியகிழக்கு சமாதானம்

**உலகில் பயங்கரவாதத்தை ஒழித்தே தீருவேன் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறைகூவுகிறார். ஆனால், தற்போது உலகில் இஸ்ரேலியர்களே மனிதத்தன்மையற்ற - மிலேச்சத்தனமான - நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும், இது ஏனோ பயங்கரவாதம் என அமெரிக்காவின் கண்களுக்குப் படவில்லை. காரணம், தனது எதிரிகளைப் பயங்கரவாதம் என்ற போர்வையில் அழித்தொழிக்கும் நடவடிக்கைகளுக்கு இஸ்ரேல் ஒத்துழைப்பது தான்.**

இஸ்ரேல் விமானப் படைக்குச் சொந்தமான தாக்குதல் விமானங்கள் கடந்த வாரம் சிரியாவின் தலைநகர டமஸ்கஸ்ஸுக்கு வடக்கே அமைந்துள்ள கைவிடப்பட்ட நிலையிலிருந்த பலஸ்தீன அகதிமுகாம் மீது தாக்குதல் மேற்கொண்டன. அச்சம்பவத்துக்கு முதல்நாளன்று 'ஹயிஷா' நகரத்திலுள்ள உணவு விடுதியொன்றில் தற்கொலைக் குண்டுதாரியான பலஸ்தீனப் பெண்ணொருவர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 19 பேருடைய மரணத்துக்குப் பழிக்குப்பழி வாங்கும் நடவடிக்கையாக இந்த விமானத் தாக்குதல் சம்பவம் கருதப்பட்டது.

பலஸ்தீன தற்கொலைக் குண்டுதாரிகளினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு பழிக்குப் பழிவாங்கும் வகையில் விமானத் தாக்குதல் மூலம் பலஸ்தீனியர்களின் கட்டடங்கள் மற்றும் சொத்துக்களை இஸ்ரேல் சேதப்படுத்துவது புதிதானதொன்றல்ல. இஸ்ரேல் நாடு ஸ்தாபிக்கப்பட்ட நாள்தொட்டு சரியாகக்கூறின் பலஸ்தீனப் பிரதேசத்தில் யூத அரசொன்று உருவாக்கும் திட்டத்தை செயற்படுத்தும் நோக்கத்துடன் தனியான அமைப்பு நிறுவப்பட்ட நாள் தொட்டு கடைப்பிடிக்கப்பட்டுவரும் நடைமுறை இதுவாகும்.

தமது சொந்தப் பாதுகாப்பை



உறுதிப்படுத்துவதற்கான உரிமை உள்ளதெனக் கருத்து வெளியிட்டதன் மூலம் 'இஸ்ரேலின் விமானத் தாக்குதலை அமெரிக்கா நியாயப்படுத்தியது. ஈராக்கில் சதாம் ஹுசைனது நிர்வாகத்தைக் கைப்பற்றிக்கொண்டதைத் தொடர்ந்து சிரியாவையும் ஆக்கிரமிக்கவேண்டுமென இஸ்ரேலும் அமெரிக்காவும் தீர்மானித்ததன் காரணமாக மத்திய கிழக்கின் தற்போதைய நிலையில் இஸ்ரேலின் இவ்விமானத்தாக்குதல் முக்கியமானதொரு சம்பவமாக அமைந்துள்ளது. ஏதோவொரு காரணத்தைக்கொண்டு சிரியா மீது தான் தாக்குதல் தொடுக்காது அப்பணியை இஸ்ரேல் மூலம் நிறைவேற்றிக்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என இச்சம்பவத்தைக் கொண்டு எண்ணுவது தவறாகாது.

இதற்கு முன்னர் 1982ஆம் ஆண்டில் லெபனானை ஆக்கிரமிக்கும் நோக்கில் அவர்களைக் குழப்பமடையவைக்கும் முயற்சியாக இவ்விதத் தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையை வரலாறு மூலம் தெரிந்துகொள்ளக் கூடியதாயுள்ளது. 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இஸ்ரேல் விமானப் படை லெபனானில் அமைந்திருந்த பலஸ்தீன அகதி முகாம்கள் மீது தாக்குதல் மேற்கொண்டது. அதற்குச் சில நாள்களுக்கு முன்னர் 'அபுநிடால்' எனப்படும் பலஸ்தீன பயங்கரவாதக் குழுவொன்று பிரித்தானியாவிலுள்ள இஸ்ரேல் தூதுவர் 'ஷ்லோமோ ஆர்கொச்சை கொலை செய்ய முயன்றமைக்குப் பழி தீர்த்துக்கொள்ளும் விதத்தில் இஸ்ரேல் விமானப் படையினர் மேற்கொண்ட இத்தாக்குதலில் சேதமுற்ற பலஸ்தீன அகதி முகாமுக்கும் 'அபுநிடால்' என்ற பயங்கரவாதக் குழுவுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இருந்ததில்லை.

ஆனால், இஸ்ரேல் தூதுவரைக் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட அந்தமுயற்சி அந்தத் தாக்குதலை நியாயப்படுத்தக்கூடிய காரணமாக அப்போதைய இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரும் தற்போதைய இஸ்ரேல் பிரதமருமான ஏரியல் ஷெரோனுக்கு இருந்தது.

அதேபோன்று அண்மையில் 'ஹய்ஷா' நகரில் உணவு விடுதியொன்றில் குண்டை வெடிக்க வைத்த தற்கொலைக் குண்டுதாரியான பெண்ணுக்கும் விமானத்தாக்குதலுக்கு இலக்கான அகதி முகாம்களுக்கும் இடையே எவ்வித தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும், லெபனானில் நிகழ்ந்தமைபோன்று இந்தச் சந்தர்ப்பத்திலும் எதிர்காலத்தில் சில சமயம் சிரியாவை ஆக்கிரமிப்பதற்கான நியாயப்படுத்தக் கூடிய காரணமாக ஏரியல் ஷெரோனுக்கு இது அமையக்கூடும்.

லெபனானை ஆக்கிரமித்த வேளையைப் போன்று தற்போது இஸ்ரேலின் அணுகுமுறையை அமெரிக்கா கண்டிக்கத் தயாராயில்லை. அதற்குப் பதிலாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் சிரியா பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிப்பது போன்று நடந்துகொள்வதால் இவ்வாறான நிலைமையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறில்லாதுவிடின் சிரியா பலஸ்தீன அகதிகளை வெளியேற்ற வேண்டும். இந்தநிலையில், இஸ்ரேல் சிரியாவை ஆக்கிரமிக்குமானால் அது இஸ்ரேல் தனது பாதுகாப்புத் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கை என்ற விதத்தில் நியாயம் கற்பிக்கக் கூடும். இவ்வித நடவடிக்கையை நியாயப்படுத்த வேண்டுமானால் அது பலஸ்தீனர்களும் அவ்வித தாக்குதலை மேற்கொள்ளும் உரிமையை வழங்கியாகவேண்டும். 'ஹயிஷா' நகரில் உணவு விடுதியில் குண்டை வெடிக்கவைத்த பெண், இவ்வித பழிவாங்கலையே மேற்கொண்டதாகக் கருதமுடியும்.

கடந்த ஆண்டில் இஸ்ரேல் இராணுவத்தினர் 'ஜெனின்' நகரத்துள் பிரவேசித்தவேளையில் அகதி முகாம்கள்மீது மேற்கொண்ட தாக்குதலில் அத்தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட அப்பெண்ணின் சகோதரனொருவரும் மற்றும் சகோதர முறையான உறவினரொருவரும் அவர்களது வீடுகளின் முன்னால் கொலை செய்யப்பட்டிருந்தனர். அது உதாரணமாகக் குறிப்பிடக்கூடிய ஒரு நிகழ்வாகும்.

இதற்கு மேலதிகமாக நகரத்தைச் சுற்றிவளைத்த இஸ்ரேல் இராணுவம் பல வாரங்களாக நகரவாசிகள் தமது வீடுகளை விட்டு வெளியே சென்று மீண்டு வருவதற்கு இடமளிக்க மறுத்தனர். இதன் பலனாய் நோயாளிகளையும் காயமடைந்தோரையும் வைத்திய உதவிபெற்றுக்கொள்ள விடாது தடுத்தனர்.

இதன் காரணமாக உருவான மனத்தாக்கம் பொதுமக்களுக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியது. ஜெனின் நகரத்தைச் சுற்றிவளைத்த பின்னர் இஸ்ரேலிய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதத் தன்மையற்ற நடவடிக்கைகள் குறித்து ஆராயும் பொருட்டு ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையால் நியமிக்கப்பட்ட குழுவினரை இஸ்ரேலுக்குள் பிரவேசிப்பதற்கு பிரதமர் ஷெரோன் அனுமதி வழங்க மறுத்து விட்டார்.

தமது பிரதிநிதிகளை இஸ்ரேலுக்



குள் அனுமதிக்க மறுத்தமை குறித்து ஆகக் குறைந்தது கண்டிப்பான அறிக்கைதானும் வெளியிடக்கூடிய திறனை ஐ.நா. சபை கொண்டிருக்கவில்லை.

ஏனைய சகல சந்தர்ப்பங்களையும் போன்றே இம்முறையும் பலஸ்தீன அதிகார சபைத் தலைவர் யஸீர் அரபாத் மீதே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. யூதர்களின் முக்கிய பண்டிகை தினமான 'யொம் கிபூர்' அண்மிக்கும் வேளையில் இடம்பெற்ற இத் தாக்குதலைத் தவிர்க்கமுடியாததால் அரபாத் கொலை செய்யப்படவேண்டுமென்ற யூதர்களின் வேண்டுகோள் பெரும் முக்கியத்துவம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் உருவாக்கப்பட்டுள்ள யூதக் குடியிருப்புகள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் தொடர்பாக யஸீர் அரபாத் மீது பொறுப்புச் சுமத்தப்படவேண்டுமாகையால் அவரும் மற்றைய பலஸ்தீனத் தலைவர்களைப் போன்று கொலை செய்யப்படவேண்டுமென இஸ்ரேல் அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அவ்விதம் செய்ய இயலாதவிடத்து அவர் மத்திய கிழக்கின் எல்லையை விட்டு வெளியேற்றப்படல்வேண்டும்.

**- அரவிந் -**

இவ்விரு நடவடிக்கைகளையும் அமெரிக்கா விரும்பாவிட்டாலும் இஸ்ரேல் அவ்வித நடவடிக்கையை மேற்கொண்டால் அமெரிக்கா அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமா எனக் கூற முடியாதுள்ளது. ஏனெனில், இது வரையில் இஸ்ரேல் மேற்கொண்ட தீர்மானம் எதனையும் எந்தவோர் அமெரிக்க ஜனாதிபதியும் எதிர்த்ததில்லை. அதற்குப் பதிலாக இஸ்ரேலுக்குத் தேவைப்பட்ட யுத்த தளபாடங்களையும் நிதியுதவிகளையும் அமெரிக்கா அதிகரித்தமையை நாம் கண்டிருக்கின்றோம்.

ஈராக் மீது ஆக்கிரமிப்பு மேற்கொள்வதற்கு முன்னர் மத்திய கிழக்கு பகுதியில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே ஈராக்கில் சதாம் ஹுசைனது நிர்வாகம் அகற்றப்பட வேண்டியது அவசியமென ஜனாதிபதி புஷ் விவரித்திருந்தார்.

ஈராக் நாட்டைக் கைப்பற்றிய பின்னர் அவர் முன்வைத்த சமாதானத்தை ஏற்படுத்தும் வழிமுறைகளை முறைப்படி நடைமுறைப்படுத்துவதன்மூலம் பலஸ்தீன - இஸ்ரேல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரக் கூடியதாயிருக்கும் என அவர் தெரிவித்திருந்தார்.

தற்போது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து பலஸ்தீன அதிகார சபைத் தலைவர் யஸீர் அரபாத் சமாதான முயற்சிகளை முறைப்படி நடைமுறைப்படுத்தும் வகையில் 'ஹமாஸ்' மற்றும் இஸ்லாமிய 'ஜிகாத்' போன்ற பிரிவினைவாத இயக்கங்களை ஒழித்துவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென அரபாத் மீது குற்றம் சுமத்தி வருகின்றனர்.

ஆதலால், இச்சமாதான முயற்சிகளைக் குழப்புவதான முழுப் பொறுப்பும் யஸீர் அரபாத்மீதே சுமத்தப்படுகிறது. இஸ்ரேல் யஸீர் அரபாத்தையும் பயங்கரவாதியாகவே கருதுகின்றது. ஆகவே, யஸீர் அரபாத்துடன் எந்தவகையான தொடர்புகளையும் பேணுவதற்கு இஸ்ரேல் தயாராக இல்லை.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னால் இரண்டாவது யுத்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து 'ரமழா' நகரிலுள்ள தமது காரியாலயத்தினுள் முடக்கப்பட்டிருக்கும் யஸீர் அரபாத்துக்குப் பதிலாக சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேறொரு தலைவர் நியமிக்கப்படவேண்டுமென்ற இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் வற்புறுத்தல் தற்போது அதிகரித்து வருகின்றது.

ஆனால், இவ்வற்புறுத்தல்களுக்கு மத்தியிலும் பிரதமராக நியமிக்கப்பட்ட மொஹமட் அப்பாஸ் அண்மையில் பதவி விலகினார்.

'ஹமாஸ்' மற்றும் இஸ்லாமிய 'ஜிகாத்' போன்ற அமைப்புகளின் தலைவர்களைக் கொலை செய்ய இஸ்ரேலால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் உருவான நிலைமை காரணமாகத் தனது பிரதமர் பதவியை அவர் ராஜினாமாச் செய்தார்.

இஸ்ரேலும் அதன் முக்கிய அனுசரணையாளரான அமெரிக்காவும், பலஸ்தீன அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் காரணமாக சமாதான முயற்சிகளை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளதெனக் கூறி வருகின்றபோதிலும், அந்த சமாதான முயற்சிகள் தொடர்பாக இஸ்ரேல் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகள்



நிறைவேற்றப்படாதது குறித்து எதுவித கருத்தையும் தெரிவிப்பதில்லை. மேற்குக்கரையிலும் காஸா பகுதியிலும் அமைதியை உறுதிசெய்வதற்கான அடிப்படைத் தேவையான இப்பிரதேசங்களில் புதிய யூதக் குடியேற்றங்களை அமைப்பதை நிறுத்துவது மற்றும் அப்பிரதேசங்களிலுள்ள பலஸ்தீன் பொதுமக்களின் திறந்தவெளிச் சிறைச்சாலைகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு பாதுகாப்புவேலிகள் அமைப்பதை நிறுத்துவதும் அமைகிறது. இவ்விரு நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்த இஸ்ரேல் தயாராக இல்லை.

பலஸ்தீன - இஸ்ரேல் மோதலுக்கு இறுதித்தீர்வான மேற்குக்கரை மற்றும் 'காஸா' பிரதேசத்தில் பலஸ்தீன அரசொன்று உருவாக்கப்படுவதற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் இப்பாதுகாப்பு வேலி அமைக்கும் நடவடிக்கையை நிறுத்துவதாகப் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், அவ்வித நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று 1967 இல் இடம்பெற்ற யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் புதிய யூதக் குடியேற்றங்களை அமைக்கும் நடவடிக்கையும் நிறுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக மேற்குக்கரையில் சட்டவிரோதமான வகையில் மூன்று புதிய குடியிருப்புத் திட்டங்களில் 600 வீடுகளை நிர்மாணிப்பதற்கு இஸ்ரேலிய அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. அமெரிக்க நிதியுதவியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளின் மூலம், அமெரிக்காவுக்கோ இஸ்ரேலுக்கோ முற்றுமுழுதாக இச்சமாதான முயற்சிகளை நடைமுறைப்படுத்தும் நோக்கமில்லையென உணரமுடிகிறது.

பலஸ்தீன இளைஞர், யுவதிகளை தற்கொலைக் குண்டுதாரிகளாக உருவாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தும் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையில் மாற்றம் எதனையும் ஏற்படுத்த அமெரிக்காவும் இஸ்ரேலும் தயாராக இல்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அவ்வேளையில் எதிர்க்கட்சியிலிருந்து ஏரியல் ஷெரோன தனது பாதுகாப்பு வீரர்களுடன் கிழக்கு ஜெருசலேம் நகரின் வழிபாட்டுத் தலமொன்றினுள் கோபாவேசத்துடன் பிரவேசித்ததன் மூலம் 'காம்ப் டேவிட்' மாநாடு தோல்வியுற்றதுடன் இரண்டாவது யுத்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டமையால் மேற்குக்கரையிலும் காஸா பிரதேசத்திலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது.

ஐ.நா.சபையின் விசேட பிரதிநிதி 'ஜீன் சீக்லர்' தயாரித்த அறிக்கைப்படி இஸ்ரேலிய இராணுவம் கடைப்பிடித்து வரும் 'சம்பவம் இடம்பெற்ற இடத்திலேயே உடனடித்தண்டனை' வழங்கும் முறையால் பலஸ்தீன பிரதேசங்களில் எதிர்ப்புக்கள் அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது. இஸ்ரேல் இராணுவம் புல்டோசர்களைப் பயன்படுத்தி விளைநிலங்களைப் பாழ்படுத்துவதால் உணவு உற்பத்தி முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. மேற்குக்கரை மற்றும் 'காஸா' பகுதிகளில் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் நூற்றுக்கு 22 வீதமானோர் போஷாக்கின்மையால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். பலருக்கு நாளொன்றுக்கு ஒருவேளை உணவே கிடைக்கின்றது.

அடிக்கடி நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு உத்தரவு காரணமாக தொழில்செய்யும் பொருட்டு வீடுகளிலிருந்தோ அல்லது அகதிமுகாம்களிலிருந்தோ வெளியே செல்லமுடியாது பொதுமக்கள் அவதிக்கு உள்ளாகின்றனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி 2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பமான இரண்டாவது யுத்த நடவடிக்கை காரணமாக இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனப் பிரதேசங்களில் உயர்ந்த அளவிலான மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. பொதுமக்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் கிடைக்காத வகையில் உள்ளகத் தடைவிதிப்பது நியாயமானதல்ல. இஸ்ரேல் இராணுவத்தின் இவ்வித செயற்பாடுகள் பொதுமக்களை பட்டினியினால் வாடவைக்கும் நடவடிக்கைக்கு ஒத்ததாகும்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதலைத் தடுக்கவேண்டுமாயின் பலஸ்தீனப் பொதுமக்களுக்கு இஸ்ரேல்

(08ஆம் பக்கம் பார்க்க)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 - 09 - 1934



விண்ணில் 29 - 10 - 1999

## அமரர் வேலாயுதர் கந்தையா

(ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சர்)

திதி: 15-10-2003

இல்லற வாழ்வில் இணைந்து
இருபத்தைந்து வருடங்கள் வருமுன்
ஈங்கு எனைத் தனித்துத் தவிக்கவிட்டு
ஈசனடி சென்று விட்டீர்கள்
உங்கள் நினைவை உளமதில் சுமந்து
ஊன் உருகி வாடும் விக்கி
எப்பிறவி எடுத்தாலும் என்னிடம்
ஓடி வந்து விடுவீர்கள் தானே என
தேற்றி இறையடியில் சாந்தி பெற
இறைஞ்சுகிறாள் உங்கள் விக்கி.

பிள்ளையார் வீதிமுகப்பு,
அளவெட்டி. (23668) (24-11-15)

பாசமிகு மனைவி
திருமதி கந்தையா விக்னேஸ்வரி.

# இஸ்ரேலியர்களின்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் இழைத்துவரும் மனிதத்தன்மையற்ற நடவடிக்கைகள் நிறுத்தப்படல்வேண்டும். அதேபோன்று, 600 ஆண்டுகளுக்கு மேலாக தீர்வு காணப்படாத பலஸ்தீனப் பிரச்சினைக்கு - பலஸ்தீனத்தில் யூத அரசு உருவாக்கப்பட்டமையால் தமது சொந்த நிலங்களை இழந்த அரேபியப் பொது மக்களது பிரச்சினைக்கு - நியாயமான தீர்வு காணப்படவேண்டியது அவசியமாகும். தனித்துவத் தன்மை கொண்ட இஸ்ரேல் அரசை அவ்வாறான தீர்வு ஒன்றுக்கு உடன்பட வைக்க வேண்டுமானால் அமெரிக்காவின் அழுத்தம் பிரயோகிக்கப்படல் வேண்டும். அண்மைக்கால நிகழ்வுகளை அவதானிக்கும் போது தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவ்விதம் இஸ்ரேல் மீது அழுத்தம் பிரயோகிப்பார் என எண்ண முடியாதுள்ளது.

ஆகவே, தற்கொலை குண்டுத் தாக்குதல்களும் அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களும் மேலும் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உண்டே தவிர, தீர்வுக்கான அறிகுறியோ, நடவடிக்கையோ தென்படவில்லை. ★

# நான்காம் ஆண்டு நினைவுக் கீறல்கள்



அமரர்

## கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(மாமா)

(முன்னாள் உபதலைவர், பூங்காவன விழாக்குழு, புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயம்)

தாயின் மடியில் 21.05.1971

கொலையின் பிடியில் 15.10.1999

*உதிர்ந்த மலரென்று உதாசீனம் செய்யாதீர்!*
*உரமாகி நாளை உதிக்கும் வேளை*
*உலகமறியும் உண்மை – அப்போது*
*உறக்கம் தவிர்ப்போம்!!!*
*"மரணம் மனமாட்சியை அறுக்கும்*
*மௌனம் மனச்சாட்சியை உறுத்தும்"*

உன் இழப்பின் நினைவுகளோடு:
தந்தை,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
மருமக்கள், பெறாமக்கள்
மற்றும் உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

சுவைத்தென்றல் கிறீம் ஹவுஸ்
சாரையடி,
புலோலி தெற்கு, புலோலி.
0777 564820 (23664) (24-11-15)

# மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 08 - 1920



மறைவு 15 - 10 - 2000

## திருமதி நல்லம்மா செல்லையா

(சன்லைற் றைக்கிளீனேர்ஸ் ஸ்தாபகரின் துணைவி)

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்முன்
வாழ்ந்திட்ட அன்னையே!
ஆண்டுகள் மூன்று ஆனாலும்
தவிக்கின்றோம் அம்மா
உங்கள் அன்பு முகம் காணாமல்!

30/2, மருதடி லேன்,
நல்லூர். (23662) (24-11-15)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 27 - 04 - 1962



உதிர்வு 15 - 10 - 1991

திருமதி
## சிவகௌரி ஜெகதீஸ்வரன்

*அன்பின் திருவுருவே! அமைதியின் அருள்வடிவே*
*என்பெல்லாம் உருகுதே! என்செய்வோம் உனைக்காண?*
*மின்னல் போல் வாழ்ந்து விரைந்து பன்னிரெண்டாண்டுகள் மறைந்தனவே*
*என்செய்வோம் நாம் இங்கே! ஏங்குகின்றோம் உனைநினைத்து....*

சுதாஸ் ஐஸ்கிறீம்
(றியோ குடும்பம்)
448, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(23665) (19-24-11-15)

பிரிவுத் துயரில்:
கணவர் - இ. ஜெகதீஸ்வரன்
பிள்ளைகள் - டயானா, சாரா.
றியோ சுவீட் ஹவுஸ்,
வீரஸ்வமடு.


mini INFOTEL
LANKA 2003

JAFFNA

October 2003 24th to 26th
From 10.00 a.m. to 9.00 p.m.
at Jaffna Central College

An unforgettable event...
an opportunity you cannot afford to miss...
the Mini Infotel Exhibition on Information Technology presents you a panoramic view of the new world of IT.

It give you a clear understanding of what is possible with It and the limitless opportunities that are being opened in all sectors.

Entrance
Adults - Rs. 20/-
Students - Rs. 10/-

DON'T MISS IT

Official Airline | Official Bank | Official Sponsors
LIONAIR | NSB | PC HOUSE Innovative Solutions | intel.

# தமக்கிடையே போட்டுள்ள வட்டமே பெண்களின் முன்னேற்றத்துக்கு தடை

## மாலதி நினைவு தினத்தில் ஆசிரியை உரை

வலி.வடக்கு,ஒக்.15

பெண்கள் தமக்கிடையே போட்டுக் கொண்டுள்ள வட்டமே அவர்களுடைய முன்னேற்றத்திற்கும் சுதந்திரத்திற்கும் தடையாக இருக்கின்றது. பெண்கள் சுதந்திரத்திற்கு ஆண்கள் தடையாக இருப்பது என்பது சரியான காரணமல்ல.

மேற்கண்டவாறு ஆசிரியை திருமதி அழகுதாசன் பாலகுமாரி குறிப்பிட்டார்.

2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் 16 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய் கைதடி வீதியில் அமைந்துள்ள மாலதி நினைவுத் தூபியில் நடைபெற்றபோது உரையாற்றிய சமயமே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருமதி அழகுதாசன் பாலகுமாரி தனது உரையில் மேலும் கூறியதாவது:-

இந்தியாவில் பெண்கள் விடுதலைக்காகப் பாடுபட்டவர்களில் பெண்களிலும் பார்க்க ஆண்களே அதிகம். பெண்களிடையே எழுச்சியை ஏற்படுத்திய பாரதியார், பாரதிதாசன் போன்றவர்களின் செயற்பாடுகளையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.


இன்றைய நிகழ்வுகூட நாட்டின் விடுதலையையும் பெண்ணின் விடுதலையையும் இணைத்தே இடம்பெறுகின்றது.

மேற்குலகைப் பொறுத்தவரையில பெண்கள் மிகவும் சுதந்திரமுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள்; மதிக்கப்படுகின்றார்கள்.

இலங்கை, இந்தியாவை எடுத்துக் கொண்டால் பெண்கள் விடுதலை என்பது எந்தளவிற்கு காணப்படுகின்றது என்பதை நாமே உணரமுடியும். பெண்களைத் தெய்வமாக வழிபடும் இந்தியாவில் இன்றும் பெண் அடிமைத்தனம் காணப்படுகின்றது. பெண்களை ஒரு மனித ஜீவனாகக் கூட ஏற்றுக்கொள்ளாத சூழ்நிலை காணப்படுகின்றது.

சில இடங்கள், நாடுகளைப் பொறுத்தவரையில் பெண்களை போகப் பொருள்களாகவும் அடிமைகளாகவுமே கையாளுகின்றார்கள். ஓர் ஆணுக்கு கல்வி வழங்குவதிலும் பார்க்க பெண்ணுக்கு வழங்கப்படும் கல்வியானது குடும்பம், சமூகம், கிராமம், தேசம் என்று பல இடங்களிலும் பயன்பாட்டை வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

பெண்கள் பட்டம், பதவிகளை மட்டும் கருத்தில் கொள்ளக்கூடாது. தனது உணர்வுகளை வெளிப்படுத்தவும் தேவைகளை வெளிக்காட்டவும் முன்வரவேண்டியது அவசியமாகும் - எனவும் தெரிவித்தார். (ம-86)



கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு வாரிவளவு நல்லியக்கச் சபையினால் அண்மையில் யாழ்ரன் கல்லூரியில் நடத்தப்பட்டது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ.மெற்றாஸ்மயில் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், கல்லூரி அதிபர் ந.பரமலிங்கம் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

*(படம். காரைநகர் செய்தியாளர்)*

**சகல வசதிகள் இருந்தும்**

# பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கு வாரத்தில் இரு நாள்கள் மட்டுமே மருத்துவர் வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.15

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு சகல வசதி வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால், வாரத்தில் இரண்டு நாள்கள் மட்டுமே மருத்துவர்கள் அங்கு கடமைக்கு செல்கின்றனர்.

- இவ்வாறு கூறினார் உலக சுகாதார ஸ்தபான (WHO) ஆலோசகரும் யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளருமான டாக்டர் என்.சிவராஜா.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பான ஆய்வுப்பட்டறையில் கலந்துகொண்டு பேசிய போதே டாக்டர். என்.சிவராஜா இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

நோயாளர் தங்கி சிகிச்சை பெறுவதற்கான விடுதி உண்டு. பிரசவ விடுதி உண்டு, மருத்துவர்கள், தாதியர்கள் தங்குவதற்கான வசதிகளும் உண்டு. எனினும், வாரத்தில் இரு நாள்கள் மட்டுமே வைத்தியசாலையில் சிகிச்சை நடைபெறுகிறது.

மிகுதி நாள்களில் மக்கள் எங்கு சென்று சிகிச்சை பெறுவது?

இதே போலத்தான் யாழ் குடாநாட்டில் உள்ள ஏனைய பிரதேச வைத்தியசாலைகளும் இயங்குகின்றன. இவை முழுமனதோடு சேவையாற்றினால், யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டிலுக்கு கீழேயிருந்து சிகிச்சை பெறவேண்டிய அவல நிலையேற்படாது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடைமையாற்ற விருப்பம் தெரிவிக்கும் டாக்டர்கள் ஏனைய வைத்தியசாலைகளில் சேவை செய்ய பின்நிற்பது வேதனைதரும் விடயம் - என்றார்.

(ம-185)



வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடத்திய இவ்வாண்டுக்கான தமிழ்மொழித்திறன் போட்டியில் முதலாம் பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவன் செல்வன் ஜெயராஜா ஜெயயாருதிக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஜ-178)

# படையினரின் பாதுகாப்புடன் இளைஞர் குழு அட்டகாசம்!

## உடுப்பிட்டியில் பதற்றம்

உடுப்பிட்டிப் பகுதியில் சிலர் படையினரின் பாதுகாப்புடன் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களால் அப்பகுதியில் பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் மூவர் கடந்த 11 ஆம் திகதி வெள்ளை வானில் வந்த இனந் தெரியாத குழுவொன்றினால் கடத்தப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் செம்மணி மயானத்தில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த அவர்கள், அப்பகுதியிலுள்ள வேறு சில இளைஞர்களின் துணையுடன் உடுப்பிட்டி வீரபத்திரர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள சனசமூக நிலைய நிர்வாகிகளுடன் முரண்பட்டுள்ளனர்.

இவர்களுடைய அடாவடிகள் எல்லை மீறிப்போக சம்பந்தப்பட்ட நிலையத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் வல்வெட்டித்துறைப் பொலீஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த அந்தக் கும்பல், இராணுவத்தின் துணையுடன் சம்பந்தப்பட்டவர்களை வீட்டிலிருந்து வெளியேறவிடாது தடுத்ததுடன் வீதியால் சென்றவர்களை துரத்தி வாளால் வெட்டிக காயம் விளைவித்தது என்று கூறப்படுகிறது.

இவர்களுடைய இந்த நடவடிக்கையால் 2 வயோதிபர்கள் வாள் வெட்டுக்கு இலக்காகி உள்ளனர். அவர்களில் ஒருவரான ச.சிவஞானம் (வயது 73) வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆலயத்தில் வழிபட்டுக்கொண்டிருந்த சமயம் இவர் வாள் வெட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இக்குழுவின் சூத்திரதாரியாகக் கருதப்படும் நபர் இராணுவ பவள் கவச வாகனத்தில் அப்பகுதியில் நடமாடுவதாகவும், அவரின் வீட்டைச் சுற்றி இராணுவம் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவங்கள் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழு ஆகியவற்றின் யாழ். அலுவலகங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-5)

# ஆசிரியத் தொழிலுக்கு மட்டுமே உலக தினம் இருப்பது பெருமை

## ஸ்கந்தா விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.15

"ஆசிரியத் தொழில்தான் உலகிலே மிக உயர்ந்த தொழில் ஆகும். வேறு எந்த தொழிலுக்கும் சர்வதேச தினம் இல்லாத நிலையில் ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவது ஆசிரியர்களுக்கு சர்வதேச ரீதியாக அளிக்கப்பட்டுள்ள கௌரவம் ஆகும்."

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற உலக ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளரும் வர்த்தகருமான சபா.புஷ்பநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மாணவர் தலைவர் எஸ்.சுதர்ஷன தலைமையில் நடந்த இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

"ஆசிரிகளுக்கும், மாணவர்களுக்குமிடையே நல்லுறவை வளர்ப்பதன் மூலமும், ஆசிரிய சமூகத்தைப் போற்றி மதிக்கின்ற பழக்கத்தை வளர்ப்பதன் மூலமும் மாணவர்கள் தம்மை வளர்த்துக்கொள்ள முடியும்; ஸ்கந்தாவையும் வளர்க்க முடியும். ஒழுக்கமான மாணவர் சமுதாயத்தின் தேவை இன்று தேச பக்தர்களாலும் புத்தி ஜீவிகளாலும் பெரிதும் குறிப்பிட்டுப் பேசப்படுவதையும் அதன் அத்தியாவசியத்தையும் மாணவர்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்" - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்த நோர்வே நாட்டில் பணிபுரியும் ஸ்கந்தாவின் பழைய மாணவன் எஸ்.சிறிதரன் உரையாற்றுகையில்:-

ஸ்கந்தாவின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்த ஆசிரியர்களை நினைவு கூர்ந்தார்.

கல்லூரியின் முதல்வர் கே. சிவாஜி தமதுரையில்:-

நன்றிமிக்க மாணவர்களின் பாராட்டுக்காகவும் விழாவை ஒழுங்கு செய்த தரத்துக்காகவும் மாணவர்களைப் பாராட்டியதுடன் நன்றியையும் தெரிவித்தார். பல ஆசிரியர்களும் கருத்துரை வழங்கினார்கள். கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன. (ஐ)

### வாழ்க்கைத்திறன் அடிப்படைக்கல்வி

சண்டிலிப்பாய்,ஒக்.15

அகதிகள் புனர்வாழ்வுக் நிறுவனமும் வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் வாழ்க்கைத்திறன் அடிப்படை கல்வி வசதி பயிற்சி வகுப்பு வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 230 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இப்பகுதியிலுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவர்களும் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயன்பெற முடியும் என்று சங்கத் தலைவர் க.அரசரத்தினம் தெரிவித்தார். (ம-135)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழக அங்கத்தவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வரலாற்றுக்கழகத்தினரின் ஆண்டுச் சஞ்சிகையான 'கால சுரபி' இதழ் வெளியீடு தொடர்பாக ஆராயப்பட இருப்பதால் அனைத்து வரலாற்றுக்கழக அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம-12)

**விவசாயிகளின் தேவை பற்றி அறிய**

# விவசாய அமைச்சு அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து சென்றனர்

வலி.தெற்கு,ஒக்.15

யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயிகளின் குறைபாடுகள், தேவைகள் பற்றி அறிந்துகொள்ளவும் விவசாயத்தின் தற்போதைய நிலை பற்றி ஆராயவும் என விவசாய அமைச்சு அதிகாரிகள் குழு ஒன்று கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது.

விவசாய கால்நடை அமைச்சின் செயலாளர் தனுசேனா ஹெட்டியாராய்ச்சி, கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் லோக்கல் இந்துருகல்ல, ஹொப்பேக்கடுவ, விவசாய ஆராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் எஸ்.சொய்சா ஆகியோர் அடங்கிய குழுவினரே இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாய இணைப்புக் குழுக் கூட்டத்திலும் திருநெல்வேலியில் உள்ள விவசாயத் திணைக்கள கட்டடத்தில் இடம்பெற்ற கூட்டத்திலும் இவர்கள் கலந்துகொண்டு விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடன் விவசாய செய்கை பற்றிய பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடினர்.

ஞாயிற்றுக்கிழமை குடாநாட்டிலுள்ள பல கமநல சேவை நிலையங்களுக்கும் இக்குழுவினர் விஜயம் செய்து அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் தெரிந்துகொண்டனர். (ம-152)

# 'சீட்ஸ்' நிறுவன பணிகள் குடாநாட்டிலும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

சர்வோதய பொருளாதார வியாபார அபிவிருத்திச்சேவைகள் நிறுவனம் (சீட்ஸ் - SEEDS) தனது பணிகளை யாழ். குடாநாட்டில் ஆரம்பித்துள்ளது.

கடந்த மாதம் யாழ். சர்வோதயத்தில் இதன் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இதன் முக்கிய பணிகள் என்று 'சீட்ஸ்' நிறுவன யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சர்வோதய சங்கங்கள் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு கடன் அடிப்படையில் நிதி உதவிகளும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் -

தென்னிலங்கையில் இயங்கி வந்த இந்த நிறுவனம், நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் வடக்கு - கிழக்கிலும் பெருந்தொகையான நிதியினை முதலீடு செய்வதற்குத் தயாராக இருக்கின்றது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி)

# த பாங்கர்

# 2003 ஆண்டின் இலங்கையின் தலைசிறந்த வங்கி

## தொடர்ச்சியாக 3 வது வருடமாகவும் எங்களுக்கே!

நாம் மீண்டும் சாதனை படைத்துள்ளோம்! லண்டன் "ஃபினான்ஷல் டைம்ஸ் பிஸ்னஸ்" அமைப்பினால் வெளியிடப்படும் சர்வதேசப் புகழ்பெற்ற "த பாங்கர்" சஞ்சிகை தொடர்ச்சியாக 3 வது வருடமாகவும் "இலங்கையின் 2003 ஆண்டின் தலைசிறந்த வங்கி" என்ற நிலைப்படுத்தலை எமக்கு வழங்கியுள்ளது. நாம் வங்கி உலகின் ஜாம்பவான்கள் மத்தியில் எமது நிலையைத் தொடர்ந்து பேணுவது குறித்துப் பெருமிதமடையும் அதேவேளையில், எங்கள் அன்புக்குரிய வாடிக்கையாளர்களுக்கும் நலன்விரும்பிகளுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நீங்கள் காட்டும் ஆதரவும் விசுவாசமுமே நாம் இன்றைய உயர்ந்த நிலையை அடைவதற்கு வழிகோலியிருக்கின்றது.

The Banker
Bank of the Year 2003
Sri Lanka

கொமர்ஷல் வங்கி

*உங்கள் நலமே எங்கள் நோக்கம்*

Q & E Advertising

## மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை விதைத்து

# தாம் ஆக்கிரமிப்பு ராணுவத்தினர் என்பதை படையினர் வெளிக் காட்டியுள்ளனர்

## இளம்பரிதி கண்காணிப்பு குழுவிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.15

சமாதானத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை விதைத்து தாங்கள் ஓர் ஆக்கிரமிப்பு இராணுவம் என்பதைப் படையினர் தற்போது வெளிக் காட்டியுள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அரசியல் ஆலோசகர் கெயிர் ஸ்ஜோபேர்க் நேற்று இளம்பரிதியை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார். அச்சமயம் இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை 9மணி முதல் 10.30மணிவரை இந்சந்திப்பு இடம் பெற்றது.

இளம்பரிதியுடன் யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர், கவியன்பன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்புக் குறித்து இளம்பரிதி செய்தியாளர்களுக்குத் தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின் இராணுவ நெருக்குவாரங்கள் நீங்கி நிம்மதியான வாழ்க்கை அமையும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அவர்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியுள்ளது.

குடாநாட்டில் 34 சதவீதமான பரப்பளவு நிலத்தை படையினர் தம் வசம் வைத்துள்ளனர். இதன் காரணமாக அந்த நிலத்தைச் சேர்ந்த 26 ஆயிரம் மக்கள் 14வருட காலமாக அகதி வாழ்க்கை வாழ்கிறார்கள். உயர் பாதுகாப்பு வலயம் என்று இந்த நிலத்தை படையினர் ஆக்கிரமித்துள்ளனர்.

இதேபோன்று, சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படவில்லை. இதன் காரணமாக மீனவ குடும்பங்கள் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள்.

பாதுகாப்பு என்ற போர்வையில் புதிய புதிய காவலரண்களையும் முகாம்களையும் படையினர் அமைத்து வருகின்றனர். இதன்மூலம் மக்களுக்கு நெருக்குவாரங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

பொதுமக்களுக்கு எதிராகப் படையினர் அண்மைய நாள்களில் செயற்பட்டு வருகின்றனர். இராணுவ வாகனங்கள் மூலம் மக்களை மோதி தாம் ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் என்பதை உறுதிசெய்து வருகின்றனர். விபத்துக்கள் இடம்பெற்ற இடங்களில் படையினர் சட்டத்துக்கு முரணாகச் செயற்பட்டு குடாநாட்டில் இராணுவ ஆட்சி ஒன்றை நடத்துவதாகக் காட்டியுள்ளனர்.

சமாதானம் நிலைபெற வேண்டுமாயின் மக்கள் மீதான நெருக்குவாரங்களை படையினர் தளர்த்த வேண்டும் - என்றார் அவர். (ம-3-8)



போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அரசியல் ஆலோசகர் கெயிர் ஸ்ஜோபேர்க் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை நேற்று சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். *(படம் : தேவா)*

# ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினரை அகற்றக்கோரி அணிதிரண்டு 'பொங்கு தமிழில்' சங்கமிப்போம் வாரீர்!

## மன்னார் ஏற்பாட்டுக் குழுவினர் அறிக்கை

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்திலுள்ள ஸ்ரீ லங்கா படைகள் மக்கள் குடியிருப்புகளிலிருந்து வெளியேறி மக்களது இயல்பு வாழ்வுக்கு அனுமதிக்க வேண்டுமென ஒருமித்த குரலில் உலகிற்கு உணர்த்துவதற்காக இன்று புதன்கிழமை மன்னார் மாவட்டத்திலுள்ள மக்கள் அனைவரையும் அணிதிரட்டி 'பொங்கு தமிழ்' நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக அண்மையில் மன்னார் மாவட்ட கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் விசேட சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

கண்காணிப்புக் குழுவினர், மன்னார் மாவட்ட இராணுவத் தளபதிகள், பொலீஸ் அதிகாரிகள், பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் ஆகியோர் கலந்துகொண்ட மேற்படி கலந்துரையாடலில் பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான படையினரின் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டது.

பொங்கு தமிழ் நிகழ்வு குழப்பமின்றி அமைதியாக நடைபெற தமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கமுடியுமென்று பொலீஸாரும் இராணுவத்தினரும் உறுதியளித்துள்ளனர்.

அத்துடன், அடம்பன், மடு போன்ற பகுதிகளில் இருந்து பொங்குதமிழ் நிகழ்விற்கு வரும் மக்கள் நிகழ்வு முடிவடைந்தவுடனேயே தமது வீடுகளுக்கு திரும்பக்கூடிய வகையில் சோதனைச்சாவடிகளைத் திறந்து வைத்து ஒத்துழைப்பு வழங்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் இராணுவத்தினர் உறுதியளித்துள்ளனர். மக்கள் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொள்ள வசதியாக இலவச போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேநீர்சாலைகள், குடிதண்ணீர் வசதிகள், குளிர்பான வசதிகள் என்பனவும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்கள் மூன்று இடங்களில் ஒன்று கூடி ஊர்வலமாகச் சென்று மன்னார் பொது விளையாட்டரங்கத்துக்குச் சென்றடைவார்கள்.

முதலாவது ஊர்வலம், மன்னார் பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பித்து தலைமன்னார் பிரதான வீதியூடாகவும் -

இரண்டாவது பேரணி, சென். சேவியர் கல்லூரியில் ஆரம்பித்து மைதானத்தை நோக்கியும்-

மூன்றாவது பேரணி, சென்.சேவியர் ஆலயத்தில் ஆரம்பித்து வைத்தியசாலை சந்தியூடாக விளையாட்டரங்கை நோக்கியும் - செல்லும்.

மூன்று பேரணிகளும் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.30 மணிக்கு மைதானத்தைச் சென்றடையும். நிகழ்வு சிறப்பாக நடைபெற கடற்றொழிலாளர்கள் இன்று தமது தொழிலை நிறுத்தியும் மன்னார் மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் இன்று தமது கடைகளை மூடி ஒத்துழைக்கும்படியும், அதேவேளை உணவு மற்றும் தேநீர்க்கடைகள், மருத்துவ நிலையங்கள், ரயர் ஒட்டும் கடைகள் என்பனவற்றைத் திறந்துவைத்து உதவும்படியும் பொங்கு தமிழ் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றில் வரும் மக்கள் தங்களது சைக்கிள்களை சென்.சேவியர் பாடசாலையிலும் நகரசபைக்கு அருகிலுள்ள வை.எம்.சி.ஏ. வளவிலும் நிறுத்திவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நிகழ்வுகள் முடிவுற்றதும் அனைத்து மக்களையும் வாகனங்களில் ஏற்றி வீடுகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, அமைதியான முறையில் வன்முறைகளின்றி நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுக்கு அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

இவ்வாறு பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# இத்தாலிக்கு சட்டவிரோதமாகச் செல்ல முயன்று கைதானவர்களில் ஐவருக்குப் பிணை அனுமதி

கொழும்பு,ஒக்.15

இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்லமுயன்று கைதுசெய்யப்பட்ட 41 பேரில், கடைசிவரை தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐவருக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

ஏற்கனவே 36 பேருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியிருந்தது.

2003ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி தங்காலையிலுள்ள குடாவெல்ல மீன்பிடித் துறைமுகத்திலிருந்து வள்ளமொன்றில் இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முயன்ற 41 இளைஞர்களை தங்காலை பொலீஸார் கைதுசெய்தனர்.

தங்காலை நீதிவான் இவர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார்.

இவர்களில் 28 பேர் தங்களுக்குப் பிணைகோரி சட்டத்தரணி ஜெயதேவி இராயப்புவின் அனுசரணையுடன் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இவர்களது மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு 28 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை மேலும் 8 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை எஞ்சியிருந்த ஐவரின் பிணை மனுக்களையும் ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதியரசர்கள் சந்திரா நாணயக்கார, காமினி அபயரட்ண ஆகியோர் ஐவரையும் பிணையில் செல்ல அனுமதி வழங்கினர்.

இவர்களுக்குப் பிணை வழங்குவதற்கு அரச சட்டவாதி சசி மகேந்திரன் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

தேவராஜா ஸ்ரீகாந்தன், கா. யோகேஸ்வரன், செல்வரட்ணம், கனகலிங்கம், சண்முகராஜா சுரேஸ்குமார், கனகேஸ்வரன் பிரதீப் ஆகியோரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர். (ஐ)

# அரசு - புலிகள் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்து

## தபால் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்க மாநாட்டில் தீர்மானம்

காரைதீவு,ஒக்.15

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கவேண்டும். அத்துடன், ஏற்படுத்தப்படவிருக்கும் இடைக்கால நிர்வாக சபையில் மூவினங்களின் இறைமையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு தபால் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்க கல்முனைக் கிளையின் 20 ஆவது வருடாந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேற்படி மாநாடு அண்மையில் சம்மாந்துறை தபாலகத்தில் சங்கத் தலைவர் பி.பாஸ்கரன் (தபாலதிபர்) தலைமையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டிற்கு கொழும்பிலிருந்து தாய்ச்சங்க உப தலைவர் எச்.ஜி. கரியவாசம், உதவிச்செயலாளர் டி.ரஞ்சித் பண்டார, கவுன்சில் உறுப்பினர் பி.அத்திமாரத்தபன, அஜித் தர்மசூரிய ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

2004/2005 உத்தியோகத்தர் தெரிவில் தலைவராக பி. பாஸ்கரன் (5ஆவது தடவை), செயலாளராக யூ.எல்.எம்.பைஸர், பொருளாளர் எம். தம்பிஐயா ஆகியோர் தெரிவானார்கள். (ஐ)

## யாழ்.குடாநாட்டில் தற்போது நிலவும்

# பொருளாதார, சமூக, அபிவிருத்தி பற்றி ஆராய 22ஆம் திகதி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவும் அரசியல், பொருளாதார, சமூக, அபிவிருத்தி, நிலைப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முரண்பாட்டுக் கற்கைகளுக்கான 'பேர் கொவ் பவுண்டேசன்' என்ற அமைப்பு இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. கண்டி வீதியில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் காரியாலயத்தில் காலை 10 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

'டயஸ் பொறா குறூப்' என்ற அமைப்பின் உறுப்பினர்களான திருமதி ஜஸ்மி பசீர், டாக்டர் ஹைரான், ஜே.ஏ.குணரட்ண, ஜானகி பாலகிருஷ்ணன், அகிலன் வரதராஜா, பிறயன் பஸ்நாயக்க, ரஞ்சித் லொச்பிலர், நிமலன் கார்த்திகேயன், டபிள்யூ.ஏ. எஸ்.பெரேரா, ஜோ.வில்லியம், டில்டாம் சுன்சர் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர். யாழ். குடாநாட்டுக்கு பொது அமைப்புக்களின் சார்பில் சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதி வண.பிதா ஏ.ஐ.பேர்னாட், யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதி பி.விக்னேஸ்வரன், கைத்தொழில் மன்றப் பிரதிநிதிகளான எஸ்.ராமதாஸ், எஸ். பூரணச்சந்திரன் பேராசிரியர்களான க.சிற்றம்பலம், சித்திரவடிவேல் ஆகியோரும் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கவுள்ளனர். (ம-8)



சிறு குற்றங்களுக்காக நீதிமன்றினால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தைச் செலுத்த முடியாது சிறைவாசம் அனுபவித்து வந்த சுமார் 100குற்றவாளிகள் 'சிலிங்கோ' குறூப்பின் அதிபர் தேசமான்ய லலித் கொத்தலாவலயின் உதவியினால் அதிலிருந்து மீண்டனர்.

குற்றவாளிகள் அனைவரினதும் தண்டப்பணமான மொத்தம் 2கோடியே 50லட்சம் ரூபாவை அவர் செலுத்தியதை அடுத்து அவர்கள் 100பேரும் சிறையில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்கள் கொத்தலாவலவிடம் ஆசீர்வாதம் பெறுவதைப் படத்தில் காணலாம். (ம-10-சி)

## உணவுமுத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உணவு முத்திரைகள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை உணவுமுத்திரைகளைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னதாக தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெற்றுக்கொள்ளுமாறும் தவறுவோருக்கு எக்காரணம் கொண்டும் முத்திரைகள் வழங்கப்படமாட்டாது எனவும் நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (3-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு உண்டு

தாவடியில், தாவடி மானிப்பாய் வீதியில் இருந்து இரண்டாவதாக உள்ள 3½ பரப்புக் காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: சுபாஸ்கரலிங்கம், மஞ்சத்தடி, காரைக்கால் வீதி, இணுவில். (23655)

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு இல. 83, செம்மணி வீதியிலுள்ள 8 பரப்புக்காணி (தென்னைப் பிரயோசனங்களுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ.பரமநாதன், 269, ஆ.வ.வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (23506)

## வலை விற்பனைக்கு

4¾"x105x1000, 21 இளை 16 துண்டுகள் உடைய, சொற்ப காலம் பாவித்த வலை விற்பனைக்குண்டு. பார்வையிடுவதற்கு குஞ்சன்னா, வேம்படி, வல்வெட்டித்துறை. விற்பனை தொடர்புகளுக்கு: M.அரியம், 4ஆம் குறுக்குத் தெரு (Hostel முன்பாக), பருத்தித்துறை. (22815)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(23538)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பறஞ்சன், பொற்பதி றோட், கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (23521)

புறொயிலர் 1Kg-140/= சுத்தம் செய்தல் இலவசம். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் லயன் பொமனேரியன் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (23447)

தரமான **Broiler** இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. ஒரு கிலோ 140/=. சுத்தம் செய்யப்பட்டது ஒரு கிலோ 230/= தொடர்பு:- திரு. சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (23549)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான **Prima, Broiler** குஞ்சுகள், தடுப்புஊசி போடப்பட்ட சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (23661)

## வீடு விற்பனைக்கு

27/17, புங்கன்குளம் வீதியில் நல்ல சூழலில் 3 பரப்புக் காணியில் அமைந்த மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (ஆறு அறைகள்) பாசையூர் அந்தோனியார் கோயிலுக்கு அருகில். தொடர்பு: T.P 0777 570279 0777-305533. (23656)

கே.கே.எஸ். வீதி, உப்புமடப் பிளையார் கோயிலுக்கு அருகில், ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடனும் வீடு 5 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. (வீடு, காணி பிரித்தும் கொடுக்கப்படும்) தொடர்பு:- 071 234 7564. (23614)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரில் இருந்து நல்லூர், கந்தர்மடம், பிறவுண்றோட் வீதிக்கு இடையில் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் வழங்கப்படும். தொடர்பு: விள.இல. 2071, மேட்பா உதயன். (23596)

## AMERICAN VISA

அமெரிக்க EDV-2005 லொத்தர் விஸா இம்முறை புதிய நடைமுறை. மேலும் விபரங்களுக்கும், ஆலோசனைகளுக்கும் தொடர்பு: சண் ரைப்பிங் சென்ரர், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.(23617)

## படிவம்

இலங்கை வர்த்தக வங்கியில் வங்கிப் பயிற்சியாள (Banking Trainees)ருக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரிப் படிவம் உண்டு.

விண்ணப்ப முடிவுதிகதி: 27.10.2003

**BHARATHI PATHIPPAKAM,**
OFFSET PRINTERS
430, K.K.S ROAD, JAFFNA.

## திருமண சேவை

1964, பூரட்டாதி, செவ்வாய்க் குற்ற மற்ற M.B.B.S. Dr,மணமகளுக்கு படித்த உத்தியோக மணமகன் தேவை. சீதனமுண்டு. மணமக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(23497)

## மணமகன் தேவை

கண்டாவில் நிரந்தர வதிவுரிமை பெற்ற, கணக்கியல் படித்துக் கொண்டிருக்கும், 25 வயதுடைய (ரோகிணி நட்சத்திரம், இரண்டில் செவ்வாய்) மணமகளுக்கு படித்த மணமகன் தேவை. தொடர்பு: விள.இல.2072, உதயன், யாழ்ப்பாணம்.

(23638)

## முன்பள்ளி திறப்புவிழா

தென்மராட்சி,ஒக்.15

யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதி உதவியுடன் கோவிலாக்கண்டி மகாவிஷ்ணு சனசமூக நிலையத்தினரால் அமைக்கப்பட்ட முன்பள்ளி திறப்புவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நடைபெறும். (ம-117)

## கிணறு அமைக்க நிதி உதவி

வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாலயத்தில் மாணவர்களின் குடிதண்ணீர் வசதிக்காக புதிய கிணறு ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது. இந்துசமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் அண்மையில் இவ் வித்தியாலயத்திற்கு வழங்கிய நிதியை கொண்டு இக்கிணறு அமைக்கப்பட்டு வருவதாக வித்தியாலய அதிபர் வி.நடராசா இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (3-135)



முத்தமிழ் கலாநிதி மகாவித்துவான், பிரம்மஶ்ரீ

## மா.த.ந.வீரமணிஐயர்(M.A.)

### அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம்

இடம் :- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

காலம் :- இன்று (15.10.2003) புதன்கிழமை மாலை 5.00மணி (இன்று ஐயாவின் 73ஆவது பிறந்ததினம்)

தலைவர்:- திரு.சி.நவநீதன் (முகிழ்நிலை ஆசிரியர்)
(தலைவர், கலாசார மன்றம், யா.தே.க.க.)

இரங்கல் உரை :-
முனைவர் சபா.ஜெயராசா P.hd.
டாக்டர் திருநாவுக்கரசு கமலநாதன்
டாக்டர் சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராசா
திரு.பாலசுப்பிரமணியம் தனபாலன் M.Phil.
திரு.கே.ஆர்.கமலநாதன் B.A.

கவிதாஞ்சலி :- முகிழ்நிலை ஆசிரியர்கள்
(யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

இரங்கல் பா:- சங்கீதபூஷணம் S.குமாரசாமி
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

**கலாசார மன்றம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(C/30698)

அனுசரணையுடன் அனுதாபம் தெரிவிப்போர்
இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர்

## சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் ஒக்ரோபர் - 15

வையகத்தில் வலம்வர வலுவிழந்த மக்களுக்கு
வாழ ஒளி காட்டிடும் வெண்பிரம்பு
அரிமாக் கழகத்தின் அயராத உழைப்பால்
அறிமுகப்படுத்தப்பட்ட வெண் பிரம்பு!

விழிவலு விழந்தோர்க்கோர் வழிகாட்டியாய்
வலுப் பெற்று நிற்கும் வெண்பிரம்பை
வாழி வாழி என வாழ்வகம்
வாழ்த்திப் பெருமிதமடைகின்றது.

உலகம் முழுவதிலுமுள்ள விழிப்புல வலுவிழந்தவர்களை, பல்கலையும் கற்று பலதுறையிலும் வளர்ந்து பல்லாண்டு வாழ வாழ்வகம் வாழ்த்துகிறது.

*சப்பாபதிப்பிள்ளை வீதி,*
*சுன்னாகம்.* (23660) (24-11-15)

- வாழ்வகம்.

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் ஐயம்பிள்ளை (செல்லத்துரை)

### (முன்னாள் வர்த்தகர் யாகிலை)

காரைநகர், நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் ஐயம்பிள்ளை 13.10.2003 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னாச்சியின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, பரிமளம், கந்தையாபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சதாசிவம் (முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்) மற்றும் கனகாம்பிகை (கனடா), சோதிநாதன் (சோதிமாளிகை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற சிவலிங்கம் (சுங்க உத்தியோகத்தர்), அரியமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவாகரன் (மாவீரர்), சிவாஞ்சலி, காலஞ்சென்ற சிவசம்பு, சிவகரன் (கனடா), சிவசெல்வி (கொழும்பு), சிவகலா (கனடா), காலஞ்சென்ற செல்வரஞ்சினி, சுரேந்திரன் (லண்டன்), ராசேந்திரன், மஞ்சுளா (ஆசிரியர், கிளி/அக்கராயன் அ.த.க.பாடசாலை), கலைச்செல்வி ஆகியோரின் அன்புப் பேரனும் தினேசின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.10.2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சோதி மாளிகை"
நீலிப்பந்தனை,
காரைநகர். (23663) (21-15-11)

தகவல்:
சி.கனகாம்பிகை (மகள்),
ஐ. சோதிநாதன் (மகன்).

TENDER NOTICE

Sri Lanka Telecom
www.slt.lk

# கேள்வி அறிவித்தல்

# ஸ்ரீலங்கா ரெலிகொம் லிமிரெட்

### வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள ஸ்ரீலரெ வளவுகளுக்கு பாதுகாப்பு சேவைகள் வழங்குவதற்கான கேள்வி

### கேள்வி இல. எச்டி/எஸ்ஈசி/07/2003

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள ஸ்ரீலரெ வளவுகளுக்கு பாதுகாப்பு சேவைகள் வழங்குவதற்காக பிரபல்யமான பாதுகாப்பு சேவைகள் வழங்குநர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் 28.10.2003 ஆம் திகதி 14.00 மணிவரையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனைத் தொடர்ந்து கொழும்பு - 01, லோற்றஸ் வீதி, ஸ்ரீலங்கா ரெலிகொம், சீரீஓ கட்டடத்தில் அமைந்துள்ள கொள்வனவுப் பிரிவுத் தலைவரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்வி ஆவணங்களை 14.10.2003 ஆம் திகதி தொடக்கம் 27.10.2003 ஆம் திகதி 14.00 மணிவரையில் அலுவலக நேரத்தில் கொழும்பு - 01, லோற்றஸ் வீதி, சீரீஓ கட்டடத்தின் முதலாம் மாடியில் கொள்வனவுப் பிரிவுத் தலைவரிடம் இருந்து மீளப் பெறமுடியாத கட்டணமாகிய ரூபா 1000 + பெசேவ 20% (ரூபா 1, 200/-) செலுத்திப் பெற்றுக்கொள்ள இயலும்.

"சீல் செய்யப்பட்ட கேள்விகளைக் கொள்வனவுப் பிரிவுத் தலைவர், சீரீஓ கட்டடம், ஸ்ரீலங்கா ரெலிகொம், லோற்றஸ் வீதி, கொழும்பு - 01 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும் அல்லது இவற்றை மேலேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடவேண்டும்.

"உறையின் இடதுபக்க மூலையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள ஸ்ரீலரெ வளவுக்குப் பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான கேள்வி"யுடன் ஏற்புடைய கேள்வி இலக்கமும் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் லிமிரெட்,
தபால் பெட்டி இல.: 503
லோற்றஸ் வீதி,
கொழும்பு - 01. (சி-30700) (24-21-15-11)

பிரதான நிறைவேற்றதிகார
உத்தியோகத்தர்
ஸ்ரீலங்கா ரெலிகொம்.

# லெப்.கேணல் விக்ரர் நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

மூத்த தளபதி லெப்ரினன்ட் கேணல் விக்ரரின் 17ஆம் ஆண்டு நினைவாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மன்னார் சூசையப்பர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியுள்ளது.

மன்னார் பொதுமைதானத்தில் இப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி லக்ஸ்மனும் முதன்மைச் சுடரினை தமிழீழ விளை யாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா வும் ஏற்றிவைத்தனர். தளபதி விக்ரரின் திருவுருவப்படத்துக்கு அவரது தந்தையார் ஈகச்சுடர் ஏற்றினார். திருவுருவப்படத்துக்கு மலர்மாலையினை மன்னார் மாவட்ட அரசியல்துறை இணைப்பாளர் மூர்த்தி, மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் நிலவரசி ஆகியோர் அணிவித்தனர்.

சிறப்புரைகளை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி லக்ஸ்மன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, மன்னார் மாவட்ட மாவீர் பணிமனைப் பொறுப்பாளர் தென்றல் மாணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

லெப். கேணல் விக்ரர் நினைவு வெற்றிக்கிண்ணத்தினை பனங்கட்டிக் கொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் பெற்றுக்கொண்டது. (ஒ-9)


## தென்மராட்சியில் மகளிர்க்கான
## அழகுக் கலை
## இருநாள் பயிலரங்கு

- மூன்று வகை பேசியல் முறைகள்
- சருமப் பாதுகாப்பும் கூந்தல் பராமரிப்பும்
- இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்கரிப்பு
- சாறி அணிதல், ஐபுறோ ஷேப்பிங்

மேற்படி பயிற்சிகளை,
இந்தியன் இன்ஸ்ரிரியூட் பியூட்டி தெரபி சென்னை நிறுவனத்தில் பயிற்சிபெற்றுத் திரும்பிய அழகுக்கலை நிபுணர் வழங்குவார்.
இடம் : மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்
காலம் : 18, 19 ஒக்ரோபர் 2003
(சனி, ஞாயிறு காலை 10 மணி மாலை 3 மணி)
ஒரு நாள் பயிற்சிக் கட்டணம் ரூ.350/= மட்டும்.
※ கலந்துகொள்வோருக்கு சான்றிதழ் உண்டு.
(C-30803)(12-18-31) - ஒழுங்கமைப்பாளர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சத்தியா ரவீந்திரன் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி இரத்தினம் சுப்பிரமணியம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள்,
(23672)(13-12-31) யா/திருக்குடும்ப கன்னியர்மடம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியரான
திரு.ப.ஜெகநாதன் அவர்களின்
அன்புத் தந்தையார்
வைத்திய கலாநிதி
கனகரத்தினம் பரமானந்தம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தி அடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. - ஆசிரியர் குழாம்.
(23671)(13-12-31)

## சபிண்டீகரண அழைப்பு



நிகழும் சுபானு வருடம் தக்ஷிணாயனமும் புரட்டாதி மாதம் தமிழ் 20ஆம் திகதி (07.10.2003) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த அமரர் பிரம்மஸ்ரீ மகாவித்துவான்
மா.த.ந.
வீரமணி ஐயர்
அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து அவர்கள் ஆத்மா சாந்தியடைந்து நற்பிறப்பை அடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.
16-10-2003 வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் சபிண்டீகரணம் (கல்விலடுப்பு)
19-10-2003 ஞாயிற்றுக்கிழமை கிருகயக்ஞம் 12.00மணியளவில் (மகேஸ்வரபூசை)
பரராஜ சேகர பிள்ளையார் கோவிலடி,
இணுவில்.
திருமதி வீரமணி ஐயரும் பெறாமக்களும்.
(சி-29806)(12-18-31)

## கசிப்பு அருந்தியவர்களுக்கு பச்சைமட்டையடி

மட்டுவில் முசுறிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டோரும், கசிப்பு அருந்திய சிலரும் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் நேற்றுமுன்தினம் சிக்கினர்.

அகப்பட்ட அனைவரும் பச்சை மட்டையடிக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## பரிசளிப்பு தினம்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-6)

## முஸ்லீம்களின் விவாதம் 21ஆம் திகதி

சமாதானப் பேச்சில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகப் பங்குபற்றுவதிலுள்ள நியாயத்தை ஏனைய கட்சிகளுக்கு உணர்த்தவும் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டுவரவுமே நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தைக் கொண்டுவருகிறோம்.

மட்டு. மாவட்ட பொ.ஐ.முன்னணி எம்.பி.எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்று இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில், ஒத்திவைப்புவேளை விவாதம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும் என்றும் சொன்னார்.


## தேவை

★ தொலைபேசி இயக்குநர்
(கணனி அறிவு விரும்பத்தக்கது)
★ போட்டோ பிரதி இயக்குநர்
(பழக விரும்புபவர்களும்)
18.10.2003 சனிக்கிழமை காலை 9.00 - 10.00 மணிக்குள் நேரில் வருகை தரவும்.
சிற்றி தொலைத்தொடர்பு சேவை,
10, பொன் இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(23677) (31-12-18)

## தொழிலாளர் தேவை

1. மெக்கானிக் (Mechanic)
2. உழவு இயந்திர சாரதி (Tractor Driver)

5 வருட அனுபவமுள்ளவர்கள் உடன் நேரில் சமுகம் தரவும். தகுந்த வேதனம் வழங்கப்படும்.
யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(23669) (31-12-18)

## லக்ஷ்மி சினிமா இணுவில்

பிரசாந்த், ஷாலினி, வையாபுரி நடித்த
பிரியாத வரம் வேண்டும் (ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பி.நே.)

## ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த், கிரண், வடிவேல், நம்பியார் நடிப்பில்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

## நாகம்ஸ் சுன்னாகம்

சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டியராஜன் நடித்த
ராமச்சந்திரா (ரீல்ஸ்)
காட்சி நேரம் : 11.00, 3.00
வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் இரவு 7.00 மணி காட்சியும் காண்பிக்கப்படும்.

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், ஜோதிகா, விவேக்
தூள் (ரீல்ஸ்)
காட்சி நேரம் : 11.30, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.45 இக்கு ஜக்கிஜான் நடித்த சாகசப்படம்
TUXE DO


# பலதாரமணம் புரிந்தவருக்கு 2வருடக் கடூழியச் சிறை

சட்டவிரோதமாகப் பலதாரமணம் முடித்த ஒருவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ்நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் திருமணச் சேவை நிலையம் நடத்தி வந்த நபருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திருமணச் சேவை நிலையத்திற்கு வந்ததன்மூலம் பழக்கமான பெண்களையே இந்த நபர் அடுத்தடுத்து மணந்துகொண்டதாகக் கூறப்படுகின்றது.

நான்கு பெண்களை சம்பிரதாய பூர்வமாகவும், வேறு சில பெண்களை சம்பிரதாயபூர்வமற்ற முறையிலும் இந்த நபர் திருமணம் செய்துகொண்டதாக விசாரணைகளில் தெரியவந்தது.

இவர் மீது சட்டவிரோதமாக பலதார திருமணம்செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கை யாழ்மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணை செய்தபோது மேற்படி நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு 2வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஒ-3-8)

## கொடி விற்பனை

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை யொட்டி இன்று விழிப்புலனற்றோரின் நல்வாழ்வுக்கு உதவும் பொருட்டு வடமராட்சி லயன்ஸ் கழகம் கொடி விற்பனையை மேற்கொள்ளவுள்ளது. பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இன்று காலை நடைபெறும் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் லயன்.ஆ. சிவசுவாமி கொடி விற்பனையை ஆரம்பித்து வைப்பார். (ஒ-9)


## இன்று ஆரம்பமாகின்றது!

## சீலோம் கிளினிக்
## SILOAM CLINIC

கே.கே.எஸ்.றோட், கொக்குவில் சந்தி.
(பழைய தபாற்கந்தோர்)

- பொது வைத்தியம்
- குழந்தை வைத்தியம்
- பெண் நோயியல்
- கர்ப்பிணிகளுக்கான வைத்தியம்
- பற்சிகிச்சை
- ஆய்வுகூட வசதி
- ECG
- சிறு சத்திர சிகிச்சை

☞ உங்களின் எந்த விதமான நோய்களுக்கும் வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் MBBS வைத்தியர்களினால் வழங்கப்படும். (23670)(12-18-31)

## வியாபாரிகளே!

உங்கள் பொருள்களை பாதுகாப்பாகக் கொண்டு செல்வதற்கேற்ற தரமான Plain & Printed Polythene Bags குறுகிய காலத்தில் நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்.

எமது நிறுவனத்தின் கீழ் வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருள்கள்

* Polysack Bags Plain & Printed
* Lunch Boxes Plain & Printed
* PVC Food Trays
* Yoghurt Cup Plain & Printed
* Drinking Cup, Curry Bowl
* Paper Plates, Paper Serviettes

RAMS TRADING
35, Lower Ground, People's Park Complex Col.-11.
Tel:2335532, Fax: 2335531, Mobile: 0777-724334.
(C/39801)(12-18-31)


## மரண அறிவித்தல்கள்

### அப்புக்குட்டி உதயசீலன் (அப்பன்)

அளவெட்டி, கருகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி உதயசீலன் 12.10.2003 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் அப்புக்குட்டி - நாகம்மா தம்பதியின் மகனும், பத்மாவதியின் (ப.தெ.வ.அ.கூ.ச,சாவகச்சேரி) அன்புக் கணவரும் பிரியங்கன், கபியங்கா, பிரஷ்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தம் - தங்கம்மா தம்பதியின் மருமகனும் பூபாலசிங்கம், ஸ்ரீகாந்தேஸ்வரி, குகனேஸ்வரன், இராஜேஸ்வரி, ரவிமலர், கிருபாகரன் (வலி.வடக்கு பிரதேச சபை), சத்தியசீலன் (London), ரவீந்திரன் ஆகியோரின் சகோதரனும் மனோகரி, பாலகிருஷ்ணன், பரமேசுதன், செல்லமுத்து, இரத்தினசிங்கம், நகுலேஸ்வரி, செல்வராணி, தமிழ்ச்செல்வி, றோமனா (London) ஆகியோரின் மைத்துனரும், சத்தியசீலன் (நோர்வே), ஜெயந்திமலர் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2003 திங்கட்கிழமை மாலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருகப்புலம்,
அளவெட்டி. T.P: 222 5695. (23683) (31-12-18-)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி செல்லத்துரை ருக்குமணி

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை ருக்குமணி அவர்கள் நேற்று (14.10.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, கதிரமலை மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2003) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11 சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தகவல்: பொ.வசீகரன், (பெறாமகன்).

# மரபணுப் பரிசோதனையின் மூலம் குழந்தையின் தந்தை கண்டுபிடிப்பு!

## தாபரிப்பு பணம் செலுத்த நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம்,ஒக்.15

மரபணுப் பரிசோதனை மூலம் ஒரு குழந்தையின் தந்தையை உறுதிப்படுத்திய யாழ். நீதிமன்றம் அக் குழந்தைக்கு அவரை தாபரிப்புபணம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

மல்லாவியைச் சேர்ந்த பெண் ஒருவர் சார்பில் தொடரப்பட்ட வழக்கிலேயே யாழ். நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

தனது குழந்தைக்கு குறிப்பிட்ட ஒரு நபரே தந்தை என்று கூறி அவர் மீது மேற்படிபெண் தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தில் முன்னர் வழக்குத் தொடர்ந்திருந்தார். அதனை விசாரித்த தமிழீழ நீதிமன்றம் குறிப்பிட்ட நபரே குழந்தைக்குத் தந்தை என்று தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பு தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் உறுதிப்படுத்துப்பட்டது. ஆனால். பிரஸ்தாப நபர் இத்தீர்ப்பை ஏற்கமறுத்து வந்தார். இந்நிலையில், குழந்தையின் தந்தையை உறுதிப்படுத்த மரபணுப பரிசோதனை செய்வதற்காக யாழ். நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதன்படி மனுதாரர், எதிர் மனுதாரர், குழந்தை ஆகியோர் மரபணுப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பரிசோதனை அறிக்கை கிடைத்த நிலையில் இந்த வழக்கு யாழ் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மரபணுப்பரிசோதனையின் படி பிரஸ்தாப நபர், குழந்தையின் உயிரியல் ரீதியான தந்தை என நீதிவான் தெரிவித்து குழந்தைக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா ஜீவனாம்சம் கட்டும்படி உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார். (3)

## டென்மார்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருணா அம்மான் உட்பட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் டென்மார்க் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடி உள்ளார்கள்.

இச்சந்திப்பினைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்று நோர்வே நாட்டிற்கு பயணமாகியுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-12)


வடமராட்சி, யாழ் - கொழும்பு பயணிகள் வான் சேவை

நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவு செய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=
ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி, தொ.இ 021-226-3500
JEYA COMMUNICATION COLOMBO - 13
Tel 01-2478444 01-2478443 0777-271478
லொறி மூலம் பொருட்களை அனுப்பலாம்



அறிவித்தல்

சில முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் (18.10.2003) சனிக்கிழமை காலை 10மணிக்கு நடைபெற இருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். (தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

செயலாளர்,
கொடிகாமம் அரசினர் வித்தியாலயம். (C/29808)


# யுத்தம் இல்லாத ஒரு நிலை மட்டும் சமாதானமாகாது

# பயங்கரவாத அமைப்புக்களைத் தோற்றுவித்த காரணிகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்

## சிங்கப்பூர் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா உரை

சிங்கப்பூர்,ஒக்.15

பயங்கரவாதத்தில் ஈடுபட்டிருக்கும் அல்லது அதனை ஆதரிக்கும் சகல அமைப்புக்களுக்கும் தனி நபர்களுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்படும். அதே வேளை, அவ்வாறான அமைப்புக்களைத் தோற்றுவித்த காரணிகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்று நாம் நம்புகிறோம். யுத்தம் இல்லாத ஒரு நிலை மட்டும் சமாதானமாகாது. முரண்பாட்டின் அடிப்படைக் காரணிகளைக் கண்டறியும் - நிவர்த்திக்கும் போரில் தீவிரமாகப் பங்குபெறுவதையும் அது குறிக்கும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று சிங்கப்பூரில் நடைபெற்ற கிழக்காசிய பொருளாதார உச்சிமாநாட்டில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

மாநாட்டில் நீண்ட உரையொன்றை ஆற்றிய ஜனாதிபதி சந்திரிகா மேலும் கூறியதாவது:-

உலகின் வேறெந்த பிராந்தியத்தைக் காட்டிலும் தெற்காசியாவே இன்று கூடுதலான முரண்பாடுகளில் சிக்கியுள்ளது. இப்பிராந்தியத்தில் மாலைதீவைத் தவிர ஏனைய ஏழு நாடுகளும் ஆயுத தீவிரவாதக் குழுக்களின் சவால்களை எதிர்நோக்கியிருக்கின்றன. உலகின் மிகப் பயங்கரமான, கொடூரமான இரு பயங்கரவாத அமைப்புக்களான அல் - கெய்டாவும் விடுதலைப் புலிகளும் பிறந்ததும், வளர்ந்ததும் செயற்படுவதும் தெற்காசியாவில்தான்.

இந்த முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பை தெற்காசிய அரசாங்கள் கொண்டிருக்கின்றன. இந்த அமைப்புக்களை உருவாக்கிய காரணிகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இப்பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாகும் என்பது கூறப்பட வேண்டியதொன்றல்ல.

பல்லின - பல கலாசார நாடுகளைக் கட்டியெழுப்பும் பணியை மேற்கொள்வதை நேர்மையாகப் பொறுப்பேற்பதே தெற்காசியாவுக்கான 21 ஆம் நூற்றாண்டு சவாலாகும்.

- இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

## சிஹல உறுமயவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்துகொள்ளும்படி அழைப்பு விடுத்த போதும் ஊர்மக்கள் கலந்துகொள்ளவில்லை எனக் கூறப்பட்டது. சந்தனாய் சந்தியை வந்தடைந்த அவர்களை இராணுவத்தினரோ பொலீஸாரோ தடுக்கவில்லை. அங்கிருந்து புறப்பட்ட அவர்கள் தம்பலகாமம் ஊடாக தமது பயணத்தைத் தொடர்ந்தனர். குரங்குபாஞ்சான் முகாமிலிருந்து சுமார் 7 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சூரன்கல் இராணுவ முகாம் பகுதியில் வைத்து அவர்களை இராணுவத்தினரும், பொலீஸாரும் வழிமறித்து திருப்பி அனுப்பினர். அப்போது சிஹல உறுமய ஆதரவாளர்களுக்கும் படையினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. எனினும் அவர்களை மேற்கொண்டு செல்ல படையினர் அனுமதிக்காது திருப்பியனுப்பினர். (ஒ-12)


மது கல்வி நிறுவனம்
இடைபாளை. கோப்பாய்.
புலமைப் பரிசில் - 2004
மாணவர்களுக்கான
விசேட வகுப்புகள் பிரிவு 2
★ ஆரம்பம்:18.10.2003
சனி காலை 8.00 மணி.
நவம்பர் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி வகுப்புகள் நடைபெறுகின்றன.
யாழ்.பிரபல ஆசிரியர்
திரு.K.பதீந்திரன்
மாதம் 2 பரிசில் பரீட்சைகள் BOND மற்றும் நிறுவன வினாத்தாள்கள்.


## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிந்திய ஆபாசத் திரைப் படங்கள் உட்பட இந்தியத் திரைப் படங்களின் பெரும் செல்வாக்கால் இலங்கையின் வர்த்தக திரைப்படத் தயாரிப்பாளர்கள் அச்சுறுத்தப்படுவதாக உணருகிறார்கள் எனவும் குறிப்பிட்ட வித்தானகே, இளைஞர்கள் மீது மோசமான விளைவுகளை ஆபாசத் திரைப்படங்கள் ஏற்படுத்துகின்றன என்ற அடிப்படையிலேயே புலிகளின் தலைவர் அவற்றைத் தடை செய்திருக்கிறார் எனவும் ஆசியத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஒத்துழைக்காவிடின் ஆசிய திரைப படத்துறையின் எதிர்காலம் ஹொலிவூட் திரைப்படத்துறை யினால் பெரிதும் பாதிக்கப்படும் எனவும் சொன்னார். (ஐ)

## போராளியின் இறுதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி புலிகளின் சீருடையுடன் புலிக்கொடி போர்த்தப்பட்டு போராளியின் உடல் கடந்த திங்கட்கிழமை வவுனியா நோக்கி எடுத்து வரப்பட்டது. அப்போது புலிகளின் சீருடையுடன் உடலை அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எடுத்துவர இராணுவம் அனுமதிமறுத்தது.

இதனால், சாதாரண சிவில் உடையுடன் புலிக்கொடி போர்த்தி எடுத்து வரப்பட்டபோது இராணுவம் அனுமதி மறுத்தது. புலிகளின் சீருடை அணிவித்து, புலிக்கொடி போர்த்தி போராளியின் உடலை அரசுக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எடுத்துவருவது யுத்தநிறுத்த மீறல் என்று இராணுவமும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் தெரிவித்தனர்.

இதற்கு இணங்கி நேற்றுக் காலை போராளியின் உடல் சீருடை, புலிக்கொடிஇன்றி கொண்டு வரப்பட்ட போது பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என்று கூறி இராணுவம் மீண்டும் தடைபோட்டது.

அதனையடுத்து பெறப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதத்தில் போராளியின் உடலுடன் 20 பேரை மட்டும் அனுமதிக்குமாறும், கூட்டம் நடத்தக்கூடாது என்றும், ஒலிபெருக்கி பயன்படுத்தக்கூடாது என்றும் - கட்டுப்பாடுகளுடன உடலை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

பின்னரே போராளியின் உடல் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஆயினும், போராளி கல்வி கற்ற ஈச்சன் குளம் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக உடலை வைக்க இராணுவத்தினர் அனுமதி வழங்கமறுத்தனர். ஆனால், பொதுமக்களின் வலியுறுத்தல்களையடுத்து படையினரதும், பொலீஸாரினதும் கடும் கெடுபிடிகளின் மத்தியில் அங்கு இறுதி நிகழ்வு இடம்பெற்றது.

கொள்கை முன்னெடுப்பாளர் போராளி திருவடி தலைமையில் இறுதி நிகழ்வு இடம்பெற்று, போராளியின் வித்துடல் ஈச்சன்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

- இவ்வாறு வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்தனர்.


தீபாவளி மலிவு விற்பனை
15.10.2003 தொடக்கம்
25.10.2003 வரை
* ஐங்கரன் வீடியோ CD படங்கள்
* ஐங்கரன் ஓடியோ CDகள்
* தமிழ், ஆங்கில DVD படங்கள்
* MP 3 CDகள்
* புதிய பழைய தமிழ் ஓடியோ, வீடியோ பாடல்கள்
* புதிய பழைய தமிழ் வீடியோ படங்கள்
* Soft ware CDகள்
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
அல்டி எலக்ரோனிக்ஸ்
(C-30810)(12-18) 15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.






யாழ். மக்களே!
நீங்கள் மிகவும் குறைந்த செலவில் சிங்கப்பூர் சென்று வர
SINGAPORE AIRLINES வழங்கும் உல்லாசப் பயண சேவை.
★ இருவழி விமானப் பயணச்சீட்டு
★ இரு இரவுகள் / மூன்று நாள்கள் சிங்கப்பூரில் காலை உணவுடன் நட்சத்திர விடுதி வசதி
★ சிங்கப்பூரில் விமான நிலையத்திற்கும் விடுதிக்குமான இருவழி போக்குவரத்துச்சேவை
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
இவ் விசேட சலுகை டிசம்பர் 31 வரை மட்டுமே
யாவும் உள்ளடங்கலாக குறைந்த செலவில் சிங்கப்பூர் சென்று வர விரும்புகின்றீர்களா? இன்றே நாடுங்கள்
எற்கின் ஸ்பென்ஸ் ஓவசீஸ் ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டட்
இல:- 48, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சிற்றி மெடிக்கல் கட்டடம்) தொலைபேசி 021- 222-2771
(C/39643) (11-18)



MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 17.10.2003 இற்கு முன் நேரில்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.